ஸ்ரீராமாநுஜன்-369

ஆசிரியர்:
ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்

தொகுதி 31 | காளயுக்தி வருஷ தைமீ 10—2—79 | பகுதி 9

பத்ராதிப விஜ்ஞாபனம்.

மார்கழி மாதத்து ஸ்ரீராமாநுஜன் மார்கழி மாதம் முதல் தேதியில் வெளியிடப்பட்டது. தை மாதத்து ஸ்ரீராமாநுஜன் தை மாத முடிவில் வெளியிடப்படுகிறது இந்தத் தாமதந்திற்குக் காரணம் அடியேனது உடல்நிலைக்கு ஏற்பட்ட அபாடவமேயாகும். இடையிடையில் அவர்ஜநீயமாக நேர்ந்த கார்யாந்தரவ்யாப்ருதியுமாகும், மார்கழி மாதம் முழுவதும் சென்னையில் போக்க நேர்ந்ததை அன்பர்கள் அறிவர். அது விச்ராந்திக்கு இடமாகுமென்று எண்ணியிருந்தும் ச்ராந்திக்கு இடமாயிற்று. சிலர் ஐப்பசி மாதம் பத்திரிகை சேரவில்லையென்றும், சிலர் ஆவணிமாதப் பத்திரிகை சேரவில்லையென்றும் இப்படி அடிக்கடி எழுதி வருகிறார்கள், யாரும்மாதத்தைக் குறிப்பிட்டு எழுதக் கூடாது; 368, 369-—என்றிப்படி நாம் லக்கம் குறிப்பிட்டு வருகிறோம். அந்த லக்கத்தைக் குறிப்பிட்டேயெழுத வேணும்

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு:- பல தடவை தெரிவித்தும் கவனிப்பில்லாதவர்களுக்கு மீண்டும் மீண்டும் தெரிவிப்பதனால் பயனில்லை 1—3—79 தேதிக்குள் சந்தாபாக்கியைத் தீர்க்காதவர்களுக்கு அடுத்த ஸஞ்சிகை நிறுத்தப்படும்.

காரியதர்சி.

acharya.org

ஸ்ரீ உ வே. தேரூர்ஸ்வாமியின் சதாப்தீமஹோத்ஸவம்

ஸ்ரீமதுபயவே. திருமலை நல்லான் சக்ரவர்த்தி. தேரூர் (சின்ன) ரங்கஸாமி ஐயங்கார் ஸ்வாமியென்கிற மஹான் காஞ்சீபுரியில் வடவண்டை மாட வீதியில் எழுந்தருளியிருந்தார். அதே திருநாமத்தோடு மற்றொரு ஸ்வாமியும் அடுத்த திருமாளிகைக்காரராய் எழுந்தருளியிருந்தார், அவரைப் பெரிய ரங்கஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியென்று வழங்குவர். அந்த ஸ்வாமி பல்லாண்டுகள் திருப்பதி தேவஸ்தான பாடசாலையில் திவ்ய ப்ரபந்தோபாத்யாயராக எழுந்தருளியிருந்தார். ப்ரக்ருதம் சின்ன ரங்கஸ்வாமி ஐயங்காரைப்பற்றி எழுதுகிறோம். இவருடைய திருவுருவப் படத்தை இங்கே ஸேவிக்கலாம். இந்த ஸ்வாமிக்குப் புத்ர ஸந்ததி ஏற்படவில்லை ஒரு புத்ரியே இருக்கின்றாள் அவளுக்குப் புதல்வர் இருவர் நல்ல நிலைமையில் வாழ்கின்றனர்- அவர்களே இந்த சதாப்தி மஹோத்ஸவத்தைச் சிறப்புற நடத்தினவர்கள். ப்ரஸ்தாவித்த ரங்காசார்யஸ்வாமி (ஒருநூறாண்டுகட்கு முன்) மார்கழி மாதத்து அநுராதா நக்ஷத்ரத்தில் திருவவதரித்தவர். அப்போதே இவர்க்கு சதாப்திமஹோத்ஸவம் நடத்த வேண்டியிருந்தும், அப்போது அநத்யயநகாலமாவிருந்தபடியால் திவ்யப்ரபந்த ஸேவைக்கு அவகாசமில்லாததனால், நிகழும் தை மாதத்து அனுஷத்திற்குச் சேர மூன்று நாள் உபய வேத பாராயணங்களுடன் அவரது திருமாளிகையில் வெகு சிறப்பாக நடத்தப்பட்டது.



சதாப்தி கண்டருளின ஸ்வாமி பகவத் விஷய ரஹஸ்யார்த்திகளை வரியடைவே அதிகரித்து ஸத்ஸம்ப்ரதாய நிஷ்ணாதராயிருந்தவர். விசேஷித்து திவ்யப்ரபந்தத்தில் அத்விதீய ஸமர்த்தராய் தேவப்பெருமாளுக்கு ஐம்பத்தைந்து வருஷ காலம் இடைவீடின்றி அருளிச் செயல் கைங்கரியம் அற்புதமாகச் செய்தவர். இவரைப்போல் கைங்கரியம் செய்தவர் எனக்குத் தெரிந்தவரையில் வேறொருவரில்லை யென்பதை ஸ்வாநுபவஸாக்ஷிகமாகத். தெரிவிக்கிறேன்.

ஸ்ரீமதுபயவே. வாகம்ருதவர்ஷி வேளுக்குடி வரதாசாரியர் ஸ்வாமி ஒருவேளை எழுந்தருளியிருந்து இவருடைய ப்ரபாவங்களைச் சிறக்க உபந்யஸித்தார். அந்த வியாஜத்தில் அரிய பெரிய ரஹஸ்யார்த்தங்களையும் செவிக்கினிதாக உபந்யஸித்தார். ஸ்ரீமதுபயவே, வித்வான் தி. அ. அக்காரக்கனி ஸம்பத் குமாராசாரியர் ஸ்வாமி சாத்துமுறை தினத்தில் ஸ்ரீராமாயணத்தில் பல அபூர்வார்த்தங்களைக் "கேட்டறியாதன கேட்கின்றோம்" என்னும்படி உபந்யஸித்தார். அடியேன் மூன்று ச்லோகங்களை விண்ணப்பம் செய்து அவற்றை விவரிக்கும் முகத்தால் ஸ்வாமியின் வைபவங்களை விவரித்துரைத்தேன்.

acharya.org

அந்த சுலோகங்களாவன:—

1 ஸ்ரீநல்லான் சக்ரவர்த்யாஹ்வய குலஜலதௌ கௌஸ்துபாபோவதீர்ண:
வாத்ஸ்யோ ரங்கார்யஸூரிச் சுபகுணநிலய: திவ்யஸூக்த்யப்திமக்ந:
தேவாதீசாங்க்ரி பத்ம த்விதய நியத கைங்கர்ய ஸாம்ராஜ்ய துர்ய:
பச்யந் ஊர்த்வம் சதாப்தீம் வஸதி சுபகுணாட்யத்விதௌஹித்ர தாதா.

2 பாரத்வாஜ குலேந்து வெங்கட வரதார்ய பாஷ்யகாரார்யௌ!
ஸ்ய்ருஹணீயகுணௌ ஸுசிரம் ஹஸ்த்யத்ரீசாங்க்ரிகிங்கரௌ ஸ்யாதாம்:

3 ஸ்வாமீ ரங்காசார்ய:ஸ்வகலிதகைங்கர்யக்லப்தயே சதுரௌ!
தத்வா தௌஹித்ரௌ த்வௌ நிராத் ஸுசிரம் ததீப்ஸிதம் ஜயது.

(இரண்டாம் ச்லோகத்தின் கருத்து) திருமலையனந்தாழ்வான் குல விளக்காய்த் தோன்றின ஸ்ரீமான்களாய் சிறந்த குணசாலிகளான வெங்கடவரதாசாரி பாஷ்யகாராசாரி யென்கிற தௌஹித்ரர்களிருவரும் நெடுநாளளவும் தேவப்பெருமாளுடைய திருவடியிணைகளில் தொண்டுபூண்டிருக்கக் கடவர்கள்.

(மூன்றும் சலோகத்தின் கருத்து) ரங்காசாரியர் ஸ்வாமி தாம் செய்து கொண்டிருந்த கைங்கரியம் என்ஞான்றும் குறையற நடந்துவரும்படிக்கு மிக நிபுணர்களான தௌஹித்ரர்களிருவரைத் தந்து போயினர். அவரது திருவுள்ளம் நீண்ட காலமளவும் வெற்றி பெற்றிருக்குமாக ... ... — *

ஸ்ரீமதுபயவே. திருப்பதி பிரதிவாதிபயங்கரம்
அண்ணா. ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி [வைகுண்டவாஸி]

அடியேனுடைய பிதாமஹர்க்கு ஸஹோதரப்ராதாக்கள் மூவர். திருப்பதியில் பிரதிவாதி பயங்கரஸ்வாமிகளின் திருமாளிகைகள் இரண்டு இருந்தன இரண்டிலும் புருஷஸந்தானம் ஏற்படாமையினால் அடியேனுடைய பிதாமஹ ஸஹோதரர்கள் இருவர் அந்த இரண்டு திருமாளிகைகளுக்கும் ஸ்வீக்ருத புத்திரர்களாக எழுந்தருளினார்கள். பெரிய திருமாளிகை யென்றும், சிறிய திருமாளிகையென்றும் வியவஹாரம். பெரிய திருமாளிகைக்காரர்க்குப் புத்திரர்கள் ஐவர் ஜனித்தனர். அந்த ஐவரில் ஜ்யேஷ்டரான ஸ்ரீமதுபயவே அண்ணா ஸ்ரீரங்காசாரியர்ஸ்வாமி அடுத்தபக்கத்தில் ஸேவைஸாதிப்பவர். திருப்பதியில் வித்வத்ஸார்வபௌமராக எழுந்தருளியிருந்த ஸ்ரீமதுபயவே. திருமலை அனந்தாண் பிள்ளை புரிசை ஸ்ரீரங்காசாரியர் ஸ்வாமிக்கு இவர் ஜ்யேஷ்ட ஜாமாதா. அந்த ஸ்வாமி திருவடிகளில் நியாய வேதாந்தங்களையதிகரித்து ஸ்ரீபாஷ்யபகவத் விஷயாதிகாரியாக எழுந்தருளியிருந்தார். இவர்க்கு ஹைதராபாத் ஜில்லாவில் சிஷ்யஸம்பத்து விசேஷமாகவுண்டு இவர்க்கும் ஸந்ததி ஏற்படவில்லை. தமது த்ருதீய ஸஹோதரரின் பௌத்ரர்களில் ஒருவரை ஸ்வீகாரம் செய்து கொண்டார். சிரஞ்சீவி கோவிந்தன் என்னுமவன் திருப்பதியிலேயே குடும்பத்துடன் வாழ்கின்றான்.

இந்த ஸ்வாமியின் அடுத்த ஸஹோதரர்க்கு ஒரு பெண்பிள்ளை மட்டுமே இருந்தனள். அவள் என்னுடைய மைத்துனர்க்கு வாழ்க்கைத்துணைவியாகி, குமாரர்கள் மூவரையும்.

acharya.org

திருமகளொருத்தியையும் பெற்றனன். மூத்த குமாரர் திருமலை, அனந்தாண்பிள்ளை, (குன்றபாக்கம்) கிருஷ்ணமாசாரியென்பவர் ந்யாய வேதாந்த சிரோமணியாய் தமிழ் வித்வானாய் திருப்பதிகாலேஜில் பல ஸம்வத்ஸரம் ந்யாயோபாத்யாயராயிருந்து இப்போது விச்ராந்தராயிருக்கிறார். இரண்டாமவர் தி.அ. கோபாலாசாரியென்பவர் வியாகரணோபாத்யாயராகத் திருப்பதி காலேஜிலேயே விளங்கி வருகிறார். மூன்றுமவர் சென்னைப் பிராந்தியத்தில் லௌகிக உத்யோகத்தில் நிஷ்ணாதர். ஸ்ரீரங்காசார்யர் ஸ்வாமியின் நான்காம் ஸஹோதரர் ஸந்ததியின்றிக்கே நெடுநாளைக்கு முன்னமே பரமபதித்தார். ஐந்தாம் ஸஹோதரர்க்கு ஒரு திருக்குமாரர் அருளிச் செயல் வல்லராய் கைங்கர்ய நிஷ்ணாதராய் விளங்காநின்றார்.

ஒரு சிறந்த உத்தேசம்.

நமது பத்ராதிபஸ்வாமியின் எண்பத்தெட்டாவது பிராயப் பூர்த்தியைப் பற்றின விளம்பரம் மேலே காணலாகும். இந்த ஸந்தர்ப்ப விசேஷத்தில், ஸ்ரீஸ்வாமியால் இயற்றப்பட்ட திவ்யப்ரபந்த-ஸ்தோத்ர ரஹஸ்ய வியாக்யானங்கள் மலிவான விலைக்கு விற்பனை செய்ய அன்பர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளது. அதாவது, நாளது மே மாத முடிவு வரையில் மட்டும் ரூபாய் நூற்றுக்கு 40 ரூ கழித்துக் கொடுக்கப்படும். ஜூன் மீ முதலாகப் பழைய படியே.

இங்ஙனம்,
க்ரந்தமாலா ஆபீஸ் காரியதரிசி.

ஆழ்வான் தனியன்

நம் ஆசார்யர்களனைவர்க்கும் தனியன்கள் ஒவ்வொரு ரீதியில் அவதரித்துள்ளது; கூரத்தாழ்வானுடைய தனியன் அவதரித்திருக்கும் விதம் உண்மையில் அதிவிலக்ஷணமானது. இத்தனியன் பட்டரருளிச் செய்ததாதலால் அவருடைய தனிப்பட்ட திருநாவீறு இதில் பொலிகின்றது. 'யதுக்தயஸ் த்ரயீகண்டே யாந்தி மங்கலஸூத்ரதாம்'' என்பது இத்தனியனில் உத்தரார்த்தம். ஆழ்வானுடைய ஸ்ரீஸூக்திகளானவை வேதமாகிற மாதின் கழுத்திலே திருமங்கலியமாக விளங்குகின்றனவென்று வெகு சமத்காரமாக அருளிச் செய்யப்படுகிறது. இதன் கருத்தைச் சிறிது விவரிப்போம். பெண்களுக்குத் திருமங்கலியமில்லாத நிலைமைகள் இரண்டு — கன்னிகையாயிருக்கும் நிலைமை ஒன்று. நூலிழந்து விதவையாயிருக்கும் நிலைமை மற்றொன்று

இவற்றுள் கன்னிகைப் பருவத்தில் பெண்களுக்குப் பலநாயகர்கள் தேறக்கூடும். ஏனெனில் பெண் கழுத்தில் ஒரு கைப் பிடாகத் தாலி ஏறுமளவும் பெரும்பாலும் பிரமசாரிகளும் விதுரர்களும் அவளைத் தன் மனைவியாகப் பாவித்திருக்கக் கூடும் 'இப்பெண்ணுக்கு நானே கணவனாகலாம்' என்று ஸ்வரூபயோக்யதையுடையாரெல்லாரும் நினைத்திருக்கக் கூடுமன்றோ. மற்றுள்ள விரக்தர்களும் க்ருஹஸ்தர்களும் அக்கன்னிகையைக் கண்டால் 'இவளுக்கு இன்னும் கணவன் நிச்சயிக்கப்படவில்லை' என்று ஸாதாரணமாக நினைத்துக்கொள்வார்கள். அப்பெண்ணின் கழுத்தில் தாலி ஏறிவிட்ட பின்பு, முன்பு தங்களுக்கென்று அபிமானித்திருந்த பிரமசாரிகளும் விதுரர்களும் 'இனி இவள் அநந்யார்ஹை' என்று நிச்சயித்துத் தாங்கள் ஆசையற்றொழிவர்கள். ஸாதாரணமாக நினைத்துக்கொண்டிருந்த மற்ற க்ருஹஸ்தர்களும் விரக்தர்களும் 'இவளுக்கு ஒரு கணவன் அமைந்துவிட்டான்' என்று நினைத்துப் போருவர்கள். இனி இரண்டாவதான வைதவ்யநிலைமையில் ஸ்த்ரீயைப் பார்க்குமவர்கள் 'இவளுக்கு ஏற்பட்டிருந்த கணவன் இறந்தொழிந்தான். இனி இவளுக்கு எப்போதும் கணவன் ஏற்படப் போகிறதில்லை. என்றெண்ணி நிற்பர்கள். ஆகவே, மாதர்கள் மங்கல நூல் இல்லாத நிலைமைகளில் பல பர்த்தாக்களை யுடையவர்களாயும், ஒரு பர்த்தாவையுமுடையராகாதவர்களாயும் இருப்பர்களென்றதாயிற்று

அதுபோல, ஆழ்வான் ஸ்ரீஸூக்திகள் அவதரிப்பதற்கு முன்பு வேதங்கள் மங்கல நூல் இல்லாத மாதரின் இரண்டு வகையான நிலைமைகளையும் உடையனவாயிருந்தன. வேதத்துக்கு ருத்ரனைப் பதியாகச் சிலர் மயங்கி அபிமானிப்பர்கள்; பிரமனைப் பதியாகப் பேதையர் சிலர் பேணுவர்கள். இங்ஙனம் பாசுபதர் முதலிய மதாந்தரஸ்தர்களால் பலபல தெய்வங்கள் பதியாக அபிமானிக்கப்பட்டும், நிரீச்வர மீமாம்ஸகாதிகளால் நாயகனே கிடையாதென்று மறுக்கப்பட்டும் கிடந்தது. ஆழ்வானுடைய பஞ்சஸ்தவம் முதலான திவ்ய ஸூக்திகள் திருவவதரித்தவுடனே 'தலையறுத்தவனும் தலையறுப்புண்டவனும் மற்றுமெவனும் வேதத்துக்கு நாயகரல்லர்; அடியோடு நாயகனே கிடையாதென்றதும் தவறு; நாயகனுண்டு, அவன் ஒருவனே; அவனுகிருன் ஸ்ரீமந் நாராயணனே என்று கல்வெட்டாக நிஷ்கர்ஷம் ஏற்பட்டபடியால் இவருடை ஸ்ரீஸூக்திகள் வேதமாதுக்கு மங்கல நூல் போன்றன:

இதனால், ஸகலதுர்மதங்களையும் நிரஸித்துப் பரதத்வ நிர்ணயம் பண்ணவல்ல வாக்வைபவமுடையவர் கூரத்தாழ்வான் என்றதாகிறது. வஸ்துஸ்திதியில் ஸ்ரீ பாஷ்யாதிகள் திருவவதரித்

acharya.org

திருந்தாலுங் கூட ஆழ்வானுடைய பஞ்சஸ்தவங்கள் அவதரிக்கவில்லையானால் நம் எம்பெருமானார் தரிசனத்திற்கு அபரிஹார்யமான குறையே யாகுமன்றோ.

இத்தகைய தனியன் பணிப்பதற்கு பட்டர் தவிர மற்றொருவராலாகாது. இத்தனியன் ஆழ்வான் தவிர மற்றொருவர்க்கும் ஏற்காது. ... ... ■

ஆழ்வானுடைய உக்தி சாதுர்யம்

எம்பெருமானைத் துதிக்கின்ற பக்தமணிகள் தங்களுடைய பலவகையான அநுபவங்களில் விலக்ஷணமான ஓர் அநுபவத்தைக் காட்டுவதுண்டு; அதாவதென்னென்னில், எம்பெருமானை நோக்கிச் சில கேள்விகள் கேட்கிற முகத்தால் ஒருவகையான குணநுபவம் பண்ணுவது. பொய்கையாழ்வார், திருமங்கையாழ்வார் முதலானோர் இவ்வனுபவத்திற்கு வழிகாட்டிகளாக அமைந்தனர். பொய்கையார் முதல் திருவந்தாதியில் (69) ¤பாலன் தனதுருவா யேழுலகுண்டு ஆலிலையின் மேலன்று நீ வளர்ந்த மெய்யென்பர்—ஆலன்று வேலை நீருள்ளதோ விண்ணதோ மண்ணதோ? சோலை சூழ் குன்றெடுத்தாய் சொல்லு¤என்று கேட்கிறார். நம்மாழ்வாருடைய வினாக்கள் பல பல ஓன்றே கேண்மின்; பெரிய திருவந்தாதியில் ¤சீரால் பிறந்து சிறப்பால் வளராது, பேர் வாமனாகாக்கால் பேராளா!- மார்பாரப், புல்கி நீயுண்டுமிழ்ந்த பூமி நீரேற்பரிதே? சொல்லு நீ யாமறியச் சூழ்ந்து.¤ என்பது. திருமங்கையாழ்வாருடைய வினாக்களிலும் ஒன்று கேண்மின்; (பெரிய திருமொழி 7-9-7)¤சேயோங்கு தண் திருமாலிருஞ்சோலை மலையுறையும் மாயா! எனக்குரையாயிது, மறை நான்கினுளாயோ? தீயோம்பு கைம்மறையோர் சிறுபுலியூர்ச் சலசயனத்தாயோ? உனதடியார் மனத்தாயோ?¤ என்பது.

இந்த வினாக்களை விவரித்து அநுபவித்தால் இன்சுவை பெருகும். ஆழ்வானுடைய ஸ்தவங்களில் அதிமாநுஷ, ஸுந்தரபாஹு வரதராஜ ஸ்தனங்களிலே வெகு ரஸகலமான கேள்விகள் அமைந்துள்ளன. திருமாலிருஞ்சோலை யழகரை நோக்கிக் கேட்கிற மூன்று கேள்விகள் அமைந்த ஒரு ச்லோகத்தை மாத்திரம் இங்கே சுருக்கமாக அநுபவிப்போம்.

"கூஹிதஸ்வமஹிமாபி ஸுந்தர! த்வம் வ்ரஜே கிமிதி சக்ரமாக்ரமீ:?
ஸப்தராத்ரமததாச்ச கிம் கிரிம் ப்ருச்சதச்ச ஸுஹ்ருத; கிமக்ருத:?"

என்பது ஸுந்தர பாஹுஸ்தவத்தில் 112-ஆம் ச்லோகம்.

இதிலுள்ள மூன்று கேள்விகளாவன:— ஸௌலப்ய ஸௌசீல்யங்களையே காட்டிப் பரத்வத்தை யொளித்து மாநுஷ்யகம் கொண்டாட வந்த விடத்திலே பரத்வம் விளங்கும் படியான செய்கைகளையும் இடையிடையே வெளியிட்டது எதற்காக? என்பது முக்கியமான கேள்வி. அழகரே! தேவரீர் ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவிலொருத்தி மகனாயொளித்து வளர்ந்தது ஸ்வகீய சக்தி விசேஷங்களை யெல்லாம் மறைத்துக்கொண்டல்லவோ? அப்படியிருந்தும், நெடுநாளாகத் திருவாய்ப்பாடியில் நடந்து வந்த தேவேந்திர ஸமாராதனையைத் தடுத்தது ஏன்? என்பது முதற்கேள்வி. இதற்கு எம்பெருமான் (அல்லது அவனுடைய பிரதிநிதிகள்) சொல்லக்கூடிய ஸமாதானம் என்னவெனில்; பராத்பரனான தான் வளருகிறவூரிலே தவதாந்தரத்திற்கு ஆராதனை யாவதென்? என்றிருந்தபடியாலே தடுத்ததாக.

அவ்விந்திரன் ஏழு நாள் கல்மழை பெய்வித்து ஆயர்களுக்கும் ஆநிரைகளுக்கும் பொறுக்கொணாத் தீங்கை விளைத்தபோது அவனைத் தலையறுத்துத் தொலைக்கவேண்டியிருகக்

acharya.org

அது செய்யாதே கோவர்த்தன மலையைக் கொற்றக்குடையாக ஏந்தி நின்றதென்? என்பது இரண்டாவது கேள்வி. 'இந்திரனது உணவைக் கொண்ட நாம் உயிரையும் கொள்ள வேணுமோ? இந்த மலையே நமக்கு ரக்ஷகமென்று நாம் அடியிலே சொன்ன சொல்லைமெய்யாக்கி இம்மலையைக் கொண்டே மழைக்கஷ்டத்தைத் தடுத்து விடுவோமாகில் அவன் கைசலித்தவாறே தானே ஓய்ந்து நிற்கிறானென்கிற விசாலமான திருவுள்ளத்தினால்—என்பது ஸமாதானம்.

ஏழு பிராயத்துச் சிறுவன் மலையெடுத்து நின்ற அதிமாநுஷ சேஷ்டிதங் கண்டு ஆச்சரியப்பட்ட ஆயர்கள் இவனுடைய பிறப்பிலே சங்கை கொண்டு "தேவோ வா தாநவோ வாத்வம் யக்ஷோ கந்தர்வ ஏவ வா ?" என்று நீ தேவனா? தானவனா? யக்ஷனா? கந்தர்வனா? என்று கேட்டளவிலே க்ஷணம் பூத்வா த்வஸௌ தூஷ்ணீம் கிஞ்சித்ப்ரணயரோஷவாந் என்கிறபடியே அப்படி அவர்கள் கேட்டதற்குச் சீற்றங்கொண்டதாக வுள்ளது. சீற்றங்கொள்ளும்படியாக அவர்கள் ஒன்றும் கேட்கவில்லையே! அப்படியிருக்க சீற்றம் கொண்டது ஏன்? என்பது மூன்றாவது கேள்வி இடையர்களிலே கடைகெட்ட இடையனாகத்தான் வந்து பிறந்திருக்கச்செய்தே, ஸஜாதீயனை விஜாதீயனாக்கிக் கேள்வி கேட்பது தவறுதலால் சீற்றமுண்டாயிற்றென்று ஸமாதானம் கண்ணபிரானுக்கு தேவத்வத்திலுங் காட்டில் கோபாலத்வமே உகப்புக்கிடமானதென்று இத்தால் விளங்கும். இப்படிப்பட்ட அர்த்தங்களை விளங்கச் செய்யும் கேள்விகளன்றோ இவை.

" துஷ்யந்தி ச ரமந்தி ச "

பகவத்கீதை பத்தாவது அத்யாயத்தில் ஒன்பதாவது ச்லோகம்—

"மச்சித்தா மத்கதப்ராணா போதயந்த: பரஸ்பரம், கதயந்தச்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச" என்பது இந்த ச்லோகம் பாகவத சிகாமணிகளின் அழகிய போது போக்கைப் பற்றிப் பகவான் [கீதாசார்யன்] பரமஸந்தோஷம் பொலியச்சொன்னது. பாகவதர்கள் இப்படி வர்த்திக்க வேணுமென்று சிக்ஷிக்கின்றதாகவும் அமைந்துள்ளது இந்த ச்லோகம். இதை நெஞ்சில் ஆவ்ருத்தி பண்ணப் பண்ண விலக்ஷணமான வோர் ஆனந்தம் பக்தர்களுக்கு உண்டாகியே தீரும். திருமழிசைப் பிரான் நான்முகன் திருவந்தாதியில் "தெரிந் தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது" என்றருளிச் செய்த பாசுரம் இந்த கீதா ச்லோகத்தை யடியொற்றியதே யென்று சொல்லலாம்.

கீதைக்குப் பல பாஷ்யங்கள் அவதரித்திருந்தாலும் நம் ஸ்வாமி எம்பெருமானாருளிச் செய்திருக்கும் பாஷ்யத்தின் மாதுர்யமும் காம்பீர்யமும் ஒப்புயர்வற்றது. அதிகமான விரிவு இன்றிக்கே ஸங்க்ஷிப்தமாகவே யிருந்தாலும் அர்த்தபுஷ்டி அந்யாத்ருச மென்பதை அநுபவ ரஸிகர்களே அறியமுடியும். சைலியை ஆழ்ந்து நோக்குமிடத்து எம்பெருமானாரும் மணவாள மாமுனிகளும் அபிநவ்யக்திகளே யென்று அறுதியிடத் தட்டில்லை. அது நிற்க.

ப்ரக்ருத ச்லோகத்தின் முடிவில் "துஷ்யந்தி ச ரமந்தி ச" என்றுள்ளது. க்ரியாபதங்களிரண்டுக்கும் 'ஸந்தோஷிக்கிறார்கள்' என்பதொன்றே பொருளாகத் தோன்றுகின்றது. இந்த புநருக்தி எதற்காக வென்று ஆராயும் போது பாஷ்யங்களை யெடுத்துப்பார்க்க ஆவல் கிளர்கின்றது. சங்கராசார்ய ஸ்வாமிகளின் பாஷ்யத்தைப் பார்த்தாலோ அதில், துஷ்யந்தி — பரிதோஷ முபயாந்தி; ரமந்தி ச — ரதிம் ச ப்ராப்நுவந்தி, ப்ரிய ஸங்கத்யா இவ' என்றுள்ளது. பரிதோஷமாவது என்ன? ரதியாவது என்ன? என்பதை நுண்ணுணர்வினர் நுட்பமாக அறிவர் போலும். இனி மத்வ பாஷ்யத்தைப் பார்த்தாலோ, இங்கு 8, 9. 10. 11, ஆகிய நான்கு ச்லோகங்களுக்கு பாஷ்யமே கிடையாது. 'ஸந்தி ச பஜந்த: கேசித்யாஹ அஹமித்யாதிநா,

acharya.org

என்று எட்டாவது ச்லோகத்திற்கு அவதாரிகையிட்டு மேல் பதினோராவது ச்லோகம் வரையில் ஸ்பஷ்டார்த்தகமென்று முடித்திட்டார். அந்த பாஷ்யத்தின் ப்ரக்ரியை பெரும்பாலும் இத்தகையதே.

இனி நம் ஸ்வாமியின் பாஷ்ய ஸூக்திகள் காண்மின்; [துஷ்யந்தி ச ரமந்தி ச] வக்தார: தத்வசநேந அநந்யப்ரயோஜநேந துஷ்யந்தி, ச்ரோதாரச்ச தச்ச்ரவணேந அநவதிகாதிசய ப்ரியேண ரமந்தே, என்றுள்ளது பகவத் கதைகளைச்சொல்லி மகிழ்வார் சிலர்; அவற்றைக் காதாரக் கேட்டுமகிழ்வார் சிலர் இவ்வகையான பேதத்தையிட்டு க்ரியாபத பேதம் செய்வதாக ஸ்வாமி திருவுள்ளம் பற்றுகிறார். மூலத்தில் 'போதயந்த: பரஸ்பரம்'' என்றிருப்பதனாலே வக்தாக்களும் ச்ரோதாக்களுமாக இரண்டு வகுப்பினர் அவசியம் தேறுகிறார்கள். அவ்விரு வகுப்பினரிடத்தும் அந்வயிக்குமாறு இரண்டு க்ரியா பதங்களை கீதாசார்யன் ப்ரயோகித்திருப்பதாக மருமம் கண்டறிந்து உரை செய்திருப்பது ஸ்வாமி ராமாநுஜர்க்குத் தன்னேற்றம்.

இந்த நுண்பொருளை ஸ்வாமி கண்டறிந்தது முன்னே நாம் காட்டிய திருமழிசைப்பிரான் பாசுரங் கொண்டே யென்னலாம். அதில் வக்த்ருத்வம் ச்ரோத்ருத்வமாகிய இரண்டும் ஆழ்வார்க்கே காலபேதேந இருப்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது. எங்ஙனேயென்னில் ''தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும்'' என்றவதில் தெரிக்கையாவது—தெரிவிக்கை; ப்ரவசநம் பண்ணுகை. அது ஒரு காலத்தில்; மற்றொரு காலத்தில் பிறர் சொல்ல ச்ரவணம் செய்கையை 'கேட்டும்' என்பதனால் குறித்தனர். ஆக ஒரு வ்யக்திக்கே காலபேதத்தாலே சொல்வதும் கேட்பதும் ஸம்பாவிதமேயாதலால், சொல்லும்போது உண்டாகு மானந்தத்தை 'துஷ்யந்தி' என்பதனாலும், கேட்குங்காலுண்டாகு மானந்தத்தை 'ரமந்தி' என்பதனாலும் கீதாசார்யன் குறிப்பிட்டதாகக் கொள்வது சிறக்கும். ... — ... ...

நாம் இருக்கவேண்டிய விதம் யாது?

நாம் ஸ்ரீ வைஷ்ணவர்கள் நம்முடைய லக்ஷணத்தை விளக்கவந்த சாஸ்த்ரங்கள் பல முகமாகப் பேசியுள்ளன. ''யே கண்டலக்நதுலஸீநளிநாக்ஷ மாலா: யே பாஹுமூல பரிசிஹ்நிதசங்கசக்ரா:, யே வா லலாடபலகே லஸதூர்த்வபுண்ட்ரா: தே வைஷ்ணவா புவநம் ஆசு பவித்ரயந்தி '' என்கிற சுலோகம் பெரும்பாலும் பலருமறிந்ததேயாகும். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இருக்க வேண்டிய வெளிவேஷங்களை மாத்திரம் இந்த ச்லோகம் தெரிவிக்கின்றதேயன்றி அந்த: கரணத்தில் இருக்கவேண்டிய அம்சங்களில் ஏகதேசத்தையும் தெரிவிக்கவில்லை. அவற்றைத் தெரிவிக்கின்ற ச்லோகங்களும் இதிஹாஸ புராணங்களில் மலிந்துகிடக்கின்றன.

பகவத்கீதையில் பத்தாவது அத்யாயத்தில் (ச்லோ 5) ''அஹிம்ஸா ஸமதா'' என்றவிடத்தில் ஸமதா என்பதை விவரித்தருளா நின்ற நமது பாஷ்யகாரர் ,,ஸமதா—ஆத்மநி ஸுஹ்ருத்ஸு விபக்ஷேஷு ச ஸமமதித்வம்'' என்றுரைத் தருளினர். அந்த தாத்பர்ய சந்த்ரிகையில் தேசிகன் ※ ஸமமதிராத்ம ஸுஹ்ருத்விபக்ஷபக்ஷே—இதி பகவத்பராசரவசந மிஹ தத்தத்பதை: ஸ்மாரிதம் ※ என்றருளிச் செய்தார்.

ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் (3—7—20) ஜநசலதி நிஜவர்ணதர்மதோ ய: ஸமமதிராத்ம ஸுஹ்ருத் விபக்ஷபக்ஷே, நஹரதி நச ஹந்தி கிஞ்சிதுச்சை ஸ்திதமநஸம் தமவேஹி விஷ்ணு பக்தம் ※ என்றுள்ள சுலோக ரத்நமே இங்கு எடுத்துக் காட்டப்பட்டதாயிற்று. இதில் ஸமமதிராத்ம ஸுஹ்ருத் விபக்ஷ பக்ஷே ※ என்கிற இரண்டாவது பாதம் முக்கியமாகக் கணிசிக்கத் தக்கது.

acharya.org

தன்னிடத்திலும் தன்நண்பர்களிடத்திலும் தன் பக்கலில் பகை பாராட்டுமவர்களிடத்திலும் ஒரு நிகரானபுத்தியையுடையவனுயிருப்பவன் எவனோ அவனே ஸ்ரீவைஷ்ணவன் என்று இதனால் தெரிவிக்கப்படுகின்றது இப்படிப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவத்வம் ப்ரஹ்லாதாழ்வான் போல்வாரிடத்தில் இருந்ததாகக் கதைகளில் கேட்டுவருகின்றோ மத்தனையல்லது இக்காலத்தில் சில வ்யக்திகளிடத்திலாவது இதைக் காண முடியுமோ என்று பார்த்தால் முடியாதென்றே முடிவு கட்டவேண்டியதாகும்

முற்காலத்தில் பட்டர் நம்பிள்ளை போல்வாருடைய சில இதிஹாஸங்களை நாம் கேட்கும் போதும் புத்தகங்களில் வாசிக்கும் போதும் 'உண்மையாக இங்ஙனே நடந்திருக்குமோ!' என்று அதிசங்கிக்குமவர்களாக நாம் இருக்கின்றோமே தவிர. 'நாமும் அந்த நடையைச் சிறிதாகிலும் அநுகரிக்க முயலவேண்டும்' என்று பாரிக்கிற அதிகாரிகள் இலரென்றே சொல்லவேண்டும்.

ஸ்ரீவசந பூஷணத்தில் "குற்றஞ் செய்தவர்கள் பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரஸ்ம்ருதியும் நடக்கவேணும்" என்றவிடத்து ஜநந்யாசார்யருடைய வியாக்கியானமான ஆய்ப்படியில் —

"பட்டர் ஒரு நாள் பெருமாள் ஸந்நிதியிலே அநுஸந்தானம் பண்ணுகிற்க, சிலர் செவி பொறுக்க வாண்ணாத பருஷோக்திகள் பண்ணக்கேட்டு, சாத்தின திருவாழிமோதிரத்தையும் திருப்பரிவட்டத்தையும் கொடுத்தருளி, முதலிகளைப் பார்த்து இவர்கள் பருஷித்ததுக்கு நான் அஞ்சிக் கொடுத்தேனன்று; நாமறியாத தோஷங்களையும் பெருமாள் திருச்செவி சாத்தும்படி சொன்ன உபகாரத்தைப் பற்றக் கொடுத்தேனத்தனை...... என்றருளிச் செய்தார்" என்று காண்கிறது பட்டர் தம்மை தூஷித்தவர்களுக்கு பூஷண தானமும் பீதாம்பர தானமும் செய்தருளினதாக இங்ஙனே இதிஹாஸம் காண்கிறோம். இதையெல்லாம் நாம் பிறர்க்கு எடுத்துரைக்கும்போது கல்லும் கரையும்படி உரைக்கின்றோம்; கேட்பவர்களும் கண்ணுங் கண்ணீருமாயிருந்து புளகாஞ்சிதராய்க் கேட்கிறார்கள் ஆனால் அவர்களுடைய அநுஷ்டானம் எங்ஙனேயிராநின்றதென்று பார்த்தால் வாய்திறக்க வழியேயில்லை.

நமக்கு நைச்யாநுஸந்தானம் ஸ்வரூபம் என்றறிந்து நாம் "நீசனேன் நிறையொன்றுமிலேன்" என்றும் "சீலமில்லாச் சிறியன்" என்றும் பலவாறு பாசுரங்களையும் ச்லோகங்களையும் முன்னிட்டுத் தாழ்வு சொல்லிக் கொள்ளுகிறோம் நம் வாயினால் வெளிவந்த அந்தத் தாழ்வு தன்னையே பிறரொருவர் நம்மை நோக்கி எடுத்துரைக்கத் தொடங்கினால் 'என்னையா நீசனென்கிறாய்? என்னையா நிறையொன்றுமில்லாதவனென்கிறாய்? என்னையா சீலமில்லாச் சிறியனென்கிறாய்? பாவி! நீயன்றோ இப்படிப்பட்டவன்' என்று உடனே அவரை ஆயிரம் வகையாக தூஷிக்கவும் தண்டிக்கவும் தண்டிபிக்கவும் எழுகின்றோம். ஒவ்வொருவரும் தம்தம் அனுபவத்தில் இதை நிச்சயமாகக் காணலாம்.

சில விசேஷ காலங்களில் பெரியார்களை எழுந்தருளப்பண்ணி 'சுவாமின்! ஸ்ரீபாத தீர்த்தம் ஸாதிக்கவேணும்' என்று வேண்டுகிறோம். அதற்கு அவர்கள் 'ஐயோ! அடியேனுக்கென்ன யோக்யதையுண்டு? ஸகல விதத்திலும் அயோக்யனன்றோ அடியேன்' என்று பல படியாக நிகர்ஷாநுஸந்தானம் பண்ணுகிறார்கள். இந்த அநுஸந்தானம் உள்ளவாறு செய்கிறபடியா? அல்லது இங்ஙனே சொல்லிக் கொள்ளவேண்டுவது ஒரு உபசார வழக்கு என்று

acharya.org

கொண்டு செய்கிறபடியா? என்று நாம் ஆலோசித்தால், அவர்களுடைய ஹ்ருதயத்தை நம்மால் தெரிந்துகொள்ளமுடியாதாயினும், அவர்கள் தாங்கள் அநுஸந்தித்த நீசத்தன்மையைநம் வாயினால்சொல்லிக்காட்டினவிடத்தும், (அதாவது நீர் மிகவும் அயோக்யர் என்று பிறர் சொன்னவிடத்திலும்) அவர்கள் உகந்தேயிருப்பர்களாயின் அப்போதுதான் அவர்களுடைய நைச்யாநுஸந்தானத்தை நாம் ஸஹ்ருதயமென்று நினைக்கலாகும்.

'அஹம் அமர்யாத:, அஹம் க்ஷுத்ர:' என்று நைச்யாநுஸந்தானம் பண்ணுமவர்கள் "த்வம் அமர்யாத த்வம் க்ஷுத்ர: என்கிற பரோக்திகளை உகந்திருக்கின்றார்களா? என்றே நாம் பார்க்கவேண்டும். கூரத்தாழ்வான் போல்வாரான சிலரே அங்ஙனமிருந்தார்கள் என்று சொல்லவேண்டியதாகின்றது. தம்மைப் பற்றிப் பிறர் கூறும் நிகர்ஷோக்திகளைச் சிறிதும் ஸஹியாமல் உடனே பிரபலமாக ப்ரதிஸத்காரம் செய்யப் புறப்படுமவர்கள் தாங்கள் செய்து கொள்ளும் நிகர்ஷாநுஸந்தானம் அர்த்தமற்றது என்றே சொல்ல வேண்டும்.

"ஒருவன் உன்னை இடது தாடையில் அறைந்தானாகில் உடனே அவனுக்கு நீ வலது தாடையை ஆதரவோடு காட்டு' என்று பிரசங்க மேடைகளில் பேசுவாரை மிக மிகக் காண்கிறோம். அப்படி அவர்கள் பேசி இப்பால் வந்தவுடனே அவரை ஒருவர் அடிப்பதாகக் கை யோங்கும்போதே என்ன நடக்கிறதென்பதையும் காணுகின்றோம்.

ஸபைகளில் சிலர் உபந்யாஸம் பண்ணி முடிக்கும்போது 'ஒன்றுமறியாத நான் ஏதோ தப்பும் தவறுமாக உளறிவிட்டேன்: இதில் நல்லது ஒன்றுகூட இராது; சிறியேனை க்ஷமிக்க வேணும்" என்று கால்மணி காலம் சொல்லி முடிப்பர்கள். இதே வார்த்தையை அவர் அயலார் வாயில் கேட்பாராகில், கோபாவேசங்கொண்டு கண்கள் சிவக்கப் பெற்று "எனக்கா ஒன்றும் தெரியாது, நானா தப்பும் தவறுமாக உளறிவிட்டேன்" என்று ஆரம்பித்து (அவரே) பிரபலமாக அட்டஹாஸங்களைச் செய்யக் காண்கிறோம். ஆசார்ய பீடம் வஹிக்கின்ற எந்த வ்யக்தியும் தம் நிகர்ஷத்தைத் தாம் அநுஸந்திக்கிறவர்களாக இருக்கின்றார்களே யல்லது. தம்மைப்பற்றிப் பிறர் கூறும் நிகர்ஷத்தை ஆமோதிப்பவர்களாக இல்லையே? அப்படி யிருப்பவர்களன்றோ ஸ்ரீ வைஷ்ணவத்வ பூர்த்தி யுடையவராவார்.

இக்காலத்தில் இப்படிப்பட்ட வ்யக்தி தேறுவது கஷ்டமாதலால் ஒருவரும் ஸ்ரீ வைஷ்ணவரல்லர் என்று நாம் சொல்லவும் எழுதவும் தகாது ×ப்ராஹ்மண்யாம் ப்ராஹ்மணாத் ஜாதத்வம் ப்ராஹ்மண்யம்× [ப்ராமஹ்மண யோனியில் பிறப்பதே ப்ராஹ்மண்யம்] என்று சொல்லுவதுபோல, ×வைஷ்ணவ்யாம் வைஷ்ணவாத் ஜாதத்வம் வைஷ்ணவத்வம்× [வைஷ்ணவ யோனியில் பிறப்பதே ஸ்ரீவைஷ்ணவத்வம்] என்று சொல்ல ப்ராப்தமாகிறது.

அப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களுடையவும் திருவுள்ளம் புண்படாதபடி வர்த்திக்க வேண்டியது நமது கடமையே யாகும். ஒரு வைஷ்ணவருடைய திருவுள்ளம் கன்றினால் அதிற்காட்டிலும் அநர்த்தபீஜம் நமக்கு வேறில்லை என்கிற துணிவு பிறக்கவேணும்.

சதுர்தச வித்யாபாரங்கதத்வம்

சில மஹான்களை சதுர்தச வித்யாபாரங்கதர்களென்று கொண்டாடுவதுண்டு பதினான்கு வித்யைகளில் கைதேர்ந்தவர்கள் என்பது இதன் கருத்து, பதினான்கு வித்யைகள்

acharya.org

எவையென்னில் நான்கு வேதங்களுக்கும் அங்கமாக அமைந்த ஆறும், உபாங்கமாக அமைந்த எட்டுங் கூடிப் பதினான்கு என்கிறது. சிக்ஷாவ்யாகரணாதிகளான ஆறங்கங்களும், மீமாம் ஸாந்யாய புராண தர்மசாஸ்த்ராதிகளான எட்டு உபாங்கங்களும்ப்ரஸித்தமானவை. இப் பதினான்கு வித்யைகளில் வல்லவர்களை சதுர்தசவித்யாபாரங்கதர்களென்று சொல்லுகிறோம். இங்ஙனே அர்த்தங் கொள்வது தவிர மற்றொரு விதம் நைஷதகாவ்யம் முதல் ஸர்க்கத்தில் ஸ்ரீ ஹர்ஷ மஹாகவியினால் காட்டப்பட்டிருக்கின்றது * அதீதிபோதாசரண ப்ரசாரணை: * என்கிற ச்லோகம் காண்க அதைச் சிறிது விவரிக்கிறோம். (சதுர்தச) என்பதற்கு நான்கோடே கூடிய பத்து என்று பொருள் கொள்ளுமளவில் பதினான்கென்று தேறுகிறது. அப்படி யன்றிக்கே ['சதஸ்ர தசா: யாஸாம் தா:- சதுர்தசா:- 'வித்யா"] என்று கொள்ளுமளவில் 'நான்கு அவஸ்தைகளையுடைய வித்யைகள்' என்று பொருள் தேறும். வித்யைகளுக்கு நான்கு அவஸ்தைகள் யாவை யென்னில்; வாசிக்கப்படுதல், அறியப்படுதல், அறிந்தபடியே அநுஷ்டிக்கப்படுதல் தாம் அநுஷ்டிப்பதோடு நில்லாமல் பிறரையும் அநுஷ்டிக்கச் செய்யப் பெறுதல் ஆகிய இவையாம்

வித்யைகளை ஏடுபார்த்து உணருகை யன்றிக்கே குருமுகமாகக் கேட்கை அத்யயனம் செய்வது இது முதல் அவஸ்தை. வாசிப்பவர்களெல்லோரும் விஷயம் தெரிந்துகொள்ளுகிறார்களென்பதில்லாமையாலே சிரமப்பட்டுப் படித்து விஷயங்களும் தெரிந்துக்கொள்ளப் பெறுதல் இரண்டாமவஸ்தை. தெரிந்துகொள்வதற்கு ப்ரயோஜனம் அனுஷ்டானமேயாதலால் தெரிந்துகொள்வதோடு நில்லாமல் அனுஷ்டானமும் செய்யப் பெறுகை மூன்றாம் அவஸ்தை. தான் அனுஷ்டிப்பதோடு நில்லாமல் பிறரையும் அனுஷ்டிக்கப் பெறுவது நான்காமவஸ்தை. ஆக இப்படிப்பட்ட சதுர்வித தசைகளையுடைய வித்யைகள் சதுர்தச வித்யைகள் இப்படி அற்புதமானதொரு நிர்வாஹத்தைக் காட்டின ஸ்ரீஹர்ஷமஹாகவியின் மேதை மெச்சத் தகுந்தது. ... ... *

திருவரங்கநாதன் திவ்யகுணானுபவம்

"தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல்"
என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்பர்போலும் *
மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசை நோக்கி மலர்கண் வைத்த
என்னுடைய திருவரங்கர்க் கன்றியும் மற்றொருவர்க்காளாவரே.

(பெரியாழ்வார் திருமொழி 4—9—2)

திருமகள் கொழுநனான எம்பெருமான் தான் பரமகாருணிகனாயிருக்கச் செய்தேயும் அவரவர்கள் செய்யும் பிழைகளுக்குத் தக்கபடி தண்டிக்கின்றவனாயு மிருக்கையாலே அடி பணிந்தவர்களும் தம் தம் அபராதங்களுக்குத் தகுந்தவாறு பிராயச்சித்தங்களைச் செய்து கொண்டாலல்லது அவர்களைத் திருவுள்ளம் பற்றுவதில்லை யென்று விரதங் கொண்டிருப்பன். அப்போது "ஸஹதர்மசரீம் சௌரேஸ் ஸம்மந்த்ரித ஜகத்திதாம், அநுக்ரஹமயீம் வந்தே நித்யம் அஜ்ஞாதநிக்ரஹாம்." என்கிறபடியே அநுக்ரஹமே வடிவெடுத்தவளும் நிக்ரஹ மென்பதை ஒருபோது மறியாதவளுமான நம்மன்னை ஸ்ரீ மஹாலக்ஷ்மியானவள் "கிமேதந் நிர்தோஷ: க இஹ ஜகதீதி த்வமுசிதைருபாயைர் விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா ததஸி ந:" [ஸ்ரீகுணரத்நகோசம்] என்கிறபடியே புருஷகார க்ருத்யத்தைச் செய்து அபராதிசேதநர்களையும் 'இவர்கள் அனுபிவந்தார்களே' என்பதுவே காரணமாக எம்பெருமானோடு கூட்டுகிறாள்"

acharya.org

அப்படிப்பட்ட புருஷகார பலத்தாலே தலையெடுக்கும் குணங்களையுடையனான ஸர்வேச்வரனும் அந்த சேதநர்களைத் திடமாகத் திருவுள்ளம் பற்றுகிறான். பிறகு பிராட்டியானவள் "இந்த ஆர்த்ராபராதி சேதநர்களை நமது கணவன் திருவுள்ளம் பற்றின விது நம்முடைய நிர்ப்பந்தத்திற்காகவேயா? அல்லது தன்னுடைய திடமான அன்பினாலேயா?" என்று பரீக்ஷிக்கப் பார்க்கிறாள் தன்னுடைய நிர்பந்தத்தாலே ஸ்வீகரித்ததாகில் ஒருகால் இவர்களைக் கைவிட்டு விடவுங்கூடும் அப்படியல்லாமல் நிஜமான அன்பினால் ஸ்வீகரித்ததாகில் ஒருநாளும் கைவிட நேராது. ஆகவே இந்த பரீக்ஷை அவசியமென்று தோன்றிப் பிராட்டி தானே புருஷகாரம் செய்து கூட்டிவைத்த சேதநர்கள் விஷயமாகவே சில குற்றங்களை யெடுத்துரைக்கத் தொடங்குகிறாள்;

(பிராட்டி) 'நாதா'! நான் ஏதோ ப்ரமித்து இவர்களுக்காக உம்மிடம் சிபார்சு செய்து மன்றாடிச் சேர்ப்பித்தேன்; பிறகு ஆராய்ந்து பார்த்தவளவில் இவர்கள் அளவு கடந்த அஸஹ்யாபராதங்களைச் செய்தவர்களென்று நன்றாய்த் தெரிய வருகின்றது. ஆகையாலிவர்களைக் கைக்கொள்ளாது தள்ளி விடுவதே நலமென்று தோன்றுகிறது' என்கிறாள்

எம்பெருமான் அதுகேட்டுக் கூறுகின்றான் —' பிராட்டியே! இவர்கள் உன்னடியார்களாயிருந்த போது ஒருகால் குற்றங்களைச் செய்திருக்கக்கூடும்; என்னடியார்களான பின்பு ஒரு போதும் குற்றஞ்செய்யார்கள்' என்று.

பிராட்டி இதுகேட்டு "நாதா! நீர் உண்மையை க்ரஹிக்கவில்லை. இவர்கள் குற்றமே வடிவெடுத்தவர்கள்; ஒரு க்ஷணகாலமும் இவர்களால் குற்றம் செய்யாதிருக்க முடியாது நீர் சிறிது விமர்சித்துப் பார்க்கவேணும்; குற்றத்திற்குத் தக்கபடி தண்டனை செய்தேயாக வேண்டும் என்கிறாள்.

அப்போது எம்பெருமான் கூறுகின்றான் — 'என்னடியார் குற்றஞ் செய்யார்களென்று நான் திண்ணமாகவெண்ணுகிறேன். குற்றவாளர்களே யிவர்கள் என்னில் குற்றத்தையே நற்றமாகக் கொள்ளுகிறேன் போ-என்று.

இப்படி பெருமாளுக்கும் பிராட்டிக்கும் ஒரு ஸம்வாதம் நிகழ்ந்ததாக வைத்துப் பெரியாழ்வார் பாசுரம் பாடியுள்ளார். இந்த ஸம்வாதத்தினால் எம்பெருமானுடைய வாத்ஸல்யாதிசயமும் அப்ரகம்ப்யமான பக்தாநுக்ரஹ மஹிமையும் ப்ரகாசப்படுத்தப் பட்டனவாகின்றன. தோஷங்களிலும் குணத்வபுத்தியே வாத்ஸல்ய மென்று பூர்வாசார்யர்கள் நிர்ணயித்தார்கள். இந்த நிர்ணயத்தை ச்ருதப்ரகாசிகாசார்யர் சரணாகதிகத்ய வியாக்கியானத்திலும் ஸ்ரீ பாஷ்ய ச்ருதப்ரகாசிகையிலும் ஸுஸ்பஷ்டமாக அநுக்ரஹித்திருக்கிறார். அஃதிருக்கட்டும்

அவரவர்களின் அபராதங்களுக்குத் தக்கபடி தண்டிக்குமியல்வினனை எம்பெருமான் சில ஸமயங்களில் சிலர் திறத்தில் 'செய்தாரேல் நன்று செய்தார்" என்று அருளிச் செய்கிறானென்று ஆப்ததமரான ஓராழ்வார் அருளிச் செய்திருப்பது அபலபிக்க முடியாமலிருக்கின்றது பெருமாளுக்கும் பிராட்டிக்கும் இப்படியொரு ஸம்பாஷணை நடந்த போது ஆழ்வார் கேட்டுக் கொண்டிருந்தாரோ இவரே கற்பனையாகக் கட்டுகிற கதை தானேயிது என்றும் சிலர் சொல்லுவதுண்டு. அவர்களுக்கு நாம் இரண்டு விதமாக பதில் சொல்லுகிறோம் × தத் ஸர்வம் தர்மவீர்யேண யதாவத் ஸம்ப்ரபச்யதி × என்றுவரங்கொண்ட வான்மீகி முனிவரிற் காட்டிலும் அதிசயத்த வரம் பெற்ற ஆழ்வார்கள் உள்ளது உள்ளபடியே

வெளியிடுவார்களேயொழிய கற்பனையாக அணுவளவும் சொல்லார்கள்.' அருளிச்செயல்களில் விச்வாஸ மில்லாதவர்களுக்கு நாம் இங்கே பதில் சொல்ல அவசியமில்லை—என்பதாக ஒரு ஸமாதானம்.(2) பிராட்டிக்கும் பெருமாளுக்கும் உண்மையாக இப்படியொரு ஸம்பாஷணை நடந்ததில்லை; ஆழ்வார் தாமே கற்பனை செய்த ஸம்வாதமேயிது என்று கொண்டாலும் குறையில்லை; இப்படி யொரு ஸம்பாஷணையையிட்டுப் பேசுகிற ஆழ்வாருடைய திருவுள்ளம் என்னவென்று பார்க்க வேணும். நிஷ்ப்ரயோஜநமாகவா ஒன்று பேசி வைப்பாராழ்வார்? திவ்ய தம்பதிகளுக்கு ஒரு ஸம்பாஷணை நடந்ததாகத் தாமே கல்பனை செய்தாலும்அதிலிருந்து ஒரு சாஸ்த்ரார்த்தத்தை வெளியிட்டருளக் கருதினாராழ்வார் என்று இசைந்துதீர வேண்டுமே;அந்த சாஸ்த்ரார்த்தம் எது! என்று கண்டறிதல் வேண்டும்.

இப்பாசுரத்தின் முதலடியில் தாமரையாள் சிதகுரைத்ததாகச் சொல்லி மேல் இரண்டாமடியில் எம்பெருமானுடைய வார்த்தைகளை இரண்டு வகையாக வைத்திருக்கிறார்- 'என்னடியார் அது செய்யார்' என்பது முதல் வார்த்தை; 'செய்தாரேல் நன்று செய்தார்' என்பது இரண்டாம் வார்த்தை. இவ்விரண்டு வார்த்தைகள் ஏதுக்கு? தாமரையாள்சிதகுரைத்தவுடனே எம்பெருமான் 'என்னடியார் செய்தது எனக்கு நன்றே' என்று ஒரே வார்த்தையாகச் சொல்லி முடித்திருக்கலாமே; என்று இதை அவசியம் விமர்சிக்க வேணும்.

விமர்சிப்போம்: இரண்டு வார்த்தைகளின்றிக்கே ஒரே வார்த்தையாக முடிந்திருக்குமாயின் சாஸ்த்ரார்த்த க்ஷேபமுண்டாகிவிடும். பக்தர்கள் செய்யும் பாபங்களெல்லாம் நியமேந எம்பெருமானுக்கு போக்யமாகி விடுவதாய் ஒரு அபஸித்தாந்தம் செய்ய ப்ராப்தமாகும் 'என்னடியார் அது செய்யார்' என்கிற முதல் வார்த்தையானது பகவத் பக்தர்கள் பாபஞ் செய்யக் கூசியே வர்த்திக்க வேணுமென்று தெரிவிக்கவே தோன்றியது. ப்ராமாதிகமாகவோ அகதிகமாகவோ தோஷங்கள் செய்ய நேர்ந்து விட்டால் அவற்றில் தனக்கு தோஷபுத்தியுண்டாகாதென்று தன் குண விசேஷத்தையும் காட்ட வேண்டி இரண்டாவது வார்த்தையாக "செய்தாரேல் நன்று செய்தார்" என்பது நிபந்திக்கப்பட்டது. ஆக இப்படிப்பட்ட இரண்டு சாஸ்த்ரார்த்தங்களையும் ப்ரகாசப் படுத்துவதே திவ்ய தம்பதிகளின் ஸம்பாஷணையாக வைத்த இந்தப் பாசுரத்திற்கு முழு நோக்கு. இதுவன்று எனின், வேறு எது? என்பதை ப்ராமாணிக மார்க்கத்திற் பேச வேண்டும்.

"நன்று செய்தாரென்பர்" என்று நிறுத்தாமல் "என்பர் போலும்" என்று சொல்லி வைத்திருக்கையாலே வஸ்துவ்ருத்தியில நன்றன்று என்றதாகத் தெறிவிட்டதாய்ச் சிலர் கருதுகின்றார்கள் இது தமிழ் மரியாதைக்குச் சிறிதும் இணங்கியதன்று "அணியார் வீதியுழுந்தூர் எந்தை பெருமானூர் மருவி நின்ற ஊர் போலும்" [பெரிய திருமொழி 7-5-1] என்று திருமங்கையாழ்வாரருளிச் செய்கிறார் இங்கு ஊர்போலும்" என்கையாலே வஸ்து வ்ருத்தியில் ஊரன்று என்கிற வியாக்கியானமே பிறர் செய்ய வேண்டியதாகும் போலும் என்றவிது (என்பர்) என்றதோடு சேர்ந்திராமல் (நன்று) என்றதோடாவது சேர்ந்திருந்தால் ஒருவேளை இவர்கள் சொல்லும் அர்த்தத்திற்கு இடமிருக்கலாம். ஆழ்வாருடைய ப்ரயோகம் அப்படியில்லை. போலுமென்பது "என்பரோடு சேர்ந்திருக்கையாலே, நன்று செய்தாரென்று பெரிய பெருமாள் சொல்லவில்லை என்பதாக ஒருவாறு பொருள் கூறவேண்டும். அப்படியே கூறுகிறோமென்னில் தன்னடியார் திறத்தகத்துச் சிதகுரைத்த தாமரையாள் எந்த அபிப்ராயத்தோடு சிதகுரைத்தாள்; அடியார்களை எம்பெருமான் உதறித் தள்ளிவிட

acharya.org

வேணுமென்கிற அபிப்ராயங்கொண்டா சிதகுரைத்தான்? அகற்கு ப்ரஸக்தியில்லையே. எம்பெருமான் பக்கலிலிருந்து ரஸகனமான வார்த்தை வெளிவருமென்றும் அதைச் செவிகுளிரக் கேட்கவேணுமென்றும் பாரித்தன்றோ சிதகுரைத்தது. 'என்னடியார் செய்தது தப்புத்தான் என்று எம்பெருமான் சொல்லிவிட்டதாகவே வைத்துக் கொள்வோம். பிறகு அந்த அடியார்களின் கதி என்னுயிற்றென்று கேட்கநேருமே. ப்ராயச்சித்தம் செய்து வாருங்கள் என்று சொல்லி உதறித்தள்ளிவிட்டானு? அல்லது, சித்திரகுத்தன் கருணையிலேறிய சூழ்வினைகட்குத் தக்கபடி நரகவேதனைகளை யநுபவிக்குமாறு சொல்லித் தூரத்தி விட்டானு? என்று கேட்க வேண்டிவரும் இத்தகைய வினக்களும், இவற்றுக்கு வெளிவரக் கூடிய விடைகளும் மிக விரஸமாகும்; ஆழ்வார் திருவுள்ளமுவந்து அநுபவித்த திருக்குணத்தை ரஸித்துப் பேசியுய்வோம். இப்பாசுரத்தின் பின்னடியில் ஜ மன்னுடைய விபீடணற்காய் ஜ என்று ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கருள்செய்த செய்தியை நினைப்பூட்டியிருக்கையாலே அடுத்தபடி அதை விவரிக்கும் முகத்தால், [செய்தாரேல் நன்று செய்தார்' என்றதன் பொருளுண்மையை நிலைநாட்டுவோம்]

அபயப்ரதானஸாரத்தில் ஓர் அருமையான பொருள்.

நிகமாந்தமகாகுரு பணித்த அபயப்ரதானஸாரத்தில் சரண்யசீலப்ரகாச மென்கிற ஐந்தாமதிகாரத்தில் பெருமாள் விபீஷணாழ்வானைப் பரிக்ரஹிக்கும் விஷயமாகத் தாம் அபூர்வமானவொரு அபிப்ராயத்தை வெளியிட்டதாக வேதாந்தகுரு அற்புதமாகப் பணித்தருளினது கேளீர். "பரிவாலே கலங்கின அங்கத சரப ஜாம்பவத் ப்ரப்ருதிகளான முதலிகள் சில ஹேத்வாபாஸங்களை ஹேதுக்களாகக் கொண்டு விபீஷண பரிக்ரஹத்தைக் கடுக இசையாதொழிய, தத்வவித்தான திருவடி அவர்கள் சொன்ன ஹேத்வாபாஸங்களை யெல்லாம் ப்ரதிக்ஷேபித்து ஸுபரீக்ஷிதங்களான நிர்தோஷ குணங்களாலே ஸ்ரீ விபீஷணாழ்வான் பரிக்ராஹ்யனென்று விண்ணப்பம் செய்தான். அவ்வளவில் பெருமாள், சரணாகதனை நலியச் சொல்லுவார் திரளிலே இவன் பரிக்ராஹ்யனென்று சொல்லுவாரையும் பெற்றோமேயென்று திருவுள்ளமுகந்து ஜ அத ராம: ப்ரஸந்நாத்மா ச்ருத்வா வாயுஸுதஸ்ய ஹ, ப்ரத்யபாஷத துர்கர்ஷ: ச்ருதவாந் ஆத்மநி ஸ்திதம் ஜ என்கிறபடியே அகம்பநீயமான ஸ்வமதத்தை அருளிச் செய்யத் தொடங்கினர்; விபீஷணன் ஸதோஷனுகையாலே அபரிக்ராஹ்யனென்ற அங்கதாதிமதங்களுக்கும், இவன் நிர்தோஷனுகையாலே பரிக்ராஹ்யன் என்கிற திருவடிமதத்துக்கும் விருத்தமாக ஸதோஷனே சரணாகதனென்று பேரிட்டு வந்தவன் பரிக்ராஹ்யனென்று தானருளிச்செய்யப் புகுகிறமதம் அவ்வாலத்தில் ஸர்வவிருத்தமாகையாலே இத்தை யெல்லாருங்கூட அநாதரிப்பர்களென்று பார்த்தருளி ஜ மமாபி து விவக்ஷாஸ்தி காசித் ப்ரதி விபீஷணம், ச்ரோதுமிச்சாமி தத் ஸர்வம் பவத்பி; ச்ரேயஸி ஸ்திதை: ஜ என்று, நம்முடைய மதத்தை நாமும் சொல்ல நினையாநின்றோம். அதினுடைய அனுஷ்டானம் பின்பு பார்த்துக்கொள்ளுகிறோம், நமக்குப் பரிவரான நீங்கள் நாம் சொல்லுகிற வாக்கியத்தை விபீஷணனுடைய சரணாகதி வாக்கியம் 'பட்டதுபடுத்தி அநாதரியாதே கேட்டுத் தரவேணுமென்று இரந்தருளினர்" ஆக இத்தனையும் வேதாந்தவாசிரியருடைய திவ்ய ஸ்ரீஸூக்திகள். மேலேயுமுள்ள பங்க்திகளை ஸ்ரீகோசத்திலே ஸேவித்துக்கொள்வது.

ஸ்ரீ ராமாயணமோதினரெல்லாருமறிந்திருப்பது இரண்டே மதம்; விபீஷணன் துஷ்டனுகையாலே சேர்த்துக்கொள்ளத் தகாதவன் என்கிற (ஸுக்ரீவாதிகளின்) மதமொன்றும், இவன் அதுஷ்டனுகையாலே சேர்த்துக்கொள்ளத் தக்கவன் என்கிற (திருவடியின்) மதமொன்றுமாக இரண்டு மதங்களுக்குமேல் மூன்ருவது மதமொன்று இருப்பதாக யாரு

acharya.org

மறந்ததில்லை. பெருமாள் ஸுக்ரீவாதி மதத்தைத் தள்ளி ஹநுமந்மதத்தை பாதரித்து விபீஷணாழ்வானைப் பரிக்ரஹித்தருளினாரென்றும் சொல்லிவருகிறோம். மேலே விவரித்த இரண்டு மதங்களையும் கண்டித்துவிட்டார் பெருமாள் என்று ஸ்வாமி தேசிகன் ஆழ்ந்து அறிந்து அழகாக வெளியிட்டிருப்பது அவருடைய தார்க்கிக ஸிம்ஹத்வத்தை நிலைநாட்டுகின்றது.

தார்க்கிகர்கள் பிரதிவாதிகளின் வாதங்களைக் கண்டிக்கும் போது சிலவிடங்களில் ஹேதுவைக் கண்டிப்பர்கள்; சிலவிடங்களில் ஸாத்யத்தைக் கண்டிப்பர்கள்; இந்த ரீதியில் சக்ரவர்த்தி திருமகன் ஸுக்ரீவாதி வாதத்தில் ஸாத்யத்தைக் கண்டித்தார்; மாருதி வாதத்தில் ஹேதுவைக் கண்டித்தார். ஸுக்ரீவாதிகளுக்கு ஸாத்யம் (விபீஷணனுடைய) அபரிக்ராஹ்யத்வம்; அதை மட்டும் கண்டித்தார். துஷ்டனுகையாலேயென்கிற ஹேதுவைக் கண்டிக்கவில்லை. மாருதிக்கு ஸாத்யம் (விபீஷணனுடைய) பரிக்ராஹ்யத்வம்; அதைக் கண்டிக்கவில்லை. அதுஷ்டனுகையாலே என்கிற ஹேதுவை மட்டும் கண்டித்தார்.

ஸுக்ரீவாதி மதம்:	மாருதி மதம்:	ஸ்ரீராம மதம்:
விபீஷணன் துஷ்டனுகையாலே கொள்ளத் தகாதவன்.	விபீஷணன் அதுஷ்டனுகையாலே கொள்ளத் தக்கவன்.	துஷ்டனுகையாலே கொள்ளத் தக்கவன்.

ஆக வெவ்வேறுபட்ட மூன்று மதங்கள் தேறிவிட்டன. தோஷமே பச்சையாக ஸ்வீகரிப்பதைத் தன்னேற்றமாகக் கொண்டவர் பெருமாள் என்று தேறிற்று. இதனால் ×செய்தாரேல் நன்று செய்தார்× என்பது வ்யாக்யாதமாயிற்று "சரணாகதனுகையாலே பரிக்ராஹ்யன்" என்பதே ஸ்ரீராமனுடைய மூன்ருவதான மதம் என்பது அஸங்கதம் அவனுடைய சரணாகதத்வத்தை ஸுக்ரீவாதிகளும் க்ஷேபிக்கவில்லையே - இதி ஸம்க்ஷேப:

ஓர் அதிசயமான வார்த்தை

ஏறக்குறைய எழுபத்தைந்து வருடங்களுக்கு முன்பு நடந்தவொரு விநோத வார்த்தை. தேவப்பெருமாள் ஸந்நிதியினுள் மணவாளமாமுனிகளுத்ஸவம் நடைபெற்று வருகிறது. ஒன்பதாமுத்ஸவத்தன்றிரவு திருவாய்மொழி ஒன்பதாம்பத்து ஸேவை நடவாநின்றது. ஸ்ரீமத் பரமஹம்ஸ. அழகிய மணவாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி, ஸ்ரீமத் வித்வத ஸார்வபௌம குன்றபாக்கம் ஸ்வாமி முதலான பல பெரியவர்கள் எழுந்தருளியிருக்கிருர்கள். அருளிச்செயல ஸேவையோ லோகோத்தரமாக நடவாநின்றது. திருவாய்மொழி ஒன்பதாம்பத்தில் ஒன்பதாந் திருவாய்மொழியில் கடைசி பாசுரம் ஸேவிக்கிருர்கள். அந்தப் பாசுரம் வருமாறு:—

"அவனைவிட்டகன்றுயிராற்றகில்லா அணியிழையாச்சியர்மாலைப்பூசல்×
அவனைவிட்டகல்வதற்கேயிரங்கி அணிகுருகூர்ச்சடகோபன்மாறன்×
அவனியுண்டுமிழ்ந்தவன்மேலுரைத்த ஆயிரத்துள்ளிவைபத்துங்கொண்டு×
அவனியுளலற்றிநின்றுய்ம்மின்தொண்டீர் அச்சொன்னமாலைநண்ணித்தொழுதே"

என்பதாம். இதில் முன்னிரண்டடிகளின் முதலில் அவனை என்று பதம்; பின்னிரண்டடிகளின் முதலில் அவனி என்று பதம். முன்னடி ஸேவித்தவர்களெல்லாரும் க்ரமமாக அவனையென்றே ஸேவித்தார்கள். பின்னடி ஸேவிப்பவர்களில் சிலர் மூன்ருமடியிலும் அவனையென்றுதான் பதமென்று நினைத்து "அவனையுண்டுமிழ்ந்தவன் மேலுரைத்த" என்று ஸேவித்தார்கள். பெரிய கோஷ்டிகளில் சுத்தமாக ஸேவிப்பவர்கள் பத்தெட்டு திருநாமங்களாய் அசுத்தமாக ஸேவிப்பவர்கள் இருவர் மூவராயிருந்தாலும் அசுத்தமான ஸேவைதான் ஓங்கி நிற்கு மென்பது எங்கும் காண்பதாகும். ஸ்ரீமத் குன்றபாக்கம் ஸ்வாமியின் பின்னுலிருந்துகொண்டு

acharya.org

ஸேவித்தவொருவர் 'அவனையுண்டுமிழ்ந்தவன் மேலுரைத்த' என்று கத்தினார் போலும். அதை அந்த ஸ்வாமி தவிர வேறு யாரும் கணிசித்ததாகத் தெரியவில்லை. சாத்துமுறை முடிந்து ஸ்வாமிகள் கீழே வீற்றிருந்த பிறகு குன்றபாக்கம் ஸ்வாமி, ஜீயர் ஸ்வாமியிடத்திலே ஸாதித்தருளுகிறார்—எல்லாவற்றையும் உண்டு உமிழ்கிறவன் அவனொருவனேயென்று நினைத்திருந்தோம்; அவனையும் உண்டு உமிழ்கிறவன் வேறொருவன் இருக்கிறான் போலும் என்று.

ஜீயர் ஸ்வாமிக்கும் மற்றுள்ள பெரியார்களுக்கும் இது விளங்கவில்லை. 'அவனை யுண்டுமிழ்ந்தவன்' என்று ஸேவித்தது அவர்களுக்குத் தெரியாமையாலே ஸ்வாமி ஸாதித்த வார்த்தையின் சுவையை ஒருவரும் அறிந்துகொள்ள முடியவில்லை என்ன என்ன? ஸூத்ரம் போல் ஸாதிக்கிறதே. எங்களுக்கொன்றும் புரியவில்லையே! என்கிறார்கள் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி ப்ரப்ருதிகள். ஸ்ரீ ஸ்வாமி அந்த வார்த்தையையே மீண்டு மீண்டும் ஸாதிக்கிறார், தவறுதலாக ஸேவித்தவர்க்கு விஷயம் புரிந்துவிட்டது. அவர் உடனேயெழுந்து, சப்தஜ்ஞானமும் அர்த்தஜ்ஞானமுமில்லாதவடியேன் பலகாலமாய் இப்படியே ஸேவித்துப் பாவியானேன். இதுவரையில் ஒருவரும் திருத்திக் கொடுத்தவர்களுமில்லை. ஸ்வாமி போல்வார் திருத்திக்கொடுத்தாலும் துர்வாஸநாபலத்தாலே பழைய அபத்தந்தான் தொடருகிறது. இத்யாதிகளை ஸவிநயமாக விண்ணப்பம் செய்தார், கடைசியாக ஜீயர் ஸ்வாமி ஸாதித்தருளின'வார்த்தை —"இப்படியெல்லாம்நேருமென்று முன்னுடியே ஆழ்வார்க்குத்தெரியும்போலும்; அதனால்தான் *எங்ஙனே சொல்லிலுமின்பம் பயக்குமே* என்று இதையும் ஒரு பலச்ருதியாக அருளிச்செய்து வைத்தார்' என்று' அன்றைய கோஷ்டி ஆனந்த வெள்ளம். ... ... *

— ஸ்ரீ காமகோடி சங்கராசார்ய ஸ்வாமிகள் விஷயம் —

அடுத்தபடி தெரிவிக்க நினைக்கும் நிகழ்ச்சி ஏறக்குறைய இருபத்தைந்து வருடங்கட்கு உட்பட்டது உலகப்ரஸித்தர்களாக விளங்கும் காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ப்ரஹ்மஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள் சின்ன காஞ்சிபுரத்திலேயே நமது தெரு கோடியிலேயே விஜயம் செய்திருந்த நாளில் ஒரு கார்த்திகை மாதத்தில் ஒருநாள் மாலை ஐந்து மணிக்கு நாம் நம்முடைய வேதவேதாந்த வைஜயந்தீ பாடசாலையிலிருந்து உபாத்யாயர்களோடும் வித்யார்த்திகளோடும் வெளிவரத் தொடங்கின ஸமயத்தில் (மேலே சொன்ன) பெரியவாளிடமிருந்து அந்தரங்கர்களான இருவர் வந்து "பெரியவாளனுப்பவந்திருக்கிறோம்; ஸந்தேசமொன்று; நிவேதனம் செய்ய அவகாசமளிக்கவேணு" மென்றார்கள் "பரம பாக்யம், அவச்யம் சொல்ல வேணும்" என்றேன். அவர்கள் சொன்னது —கொஞ்ச காலமாக ஆங்காங்கு திருப்பாவை திருவெம்பாவை மகாநாடுகள் பெரியவாளுடைய கட்டளையின்மேல் நடந்துவருகின்றனவல்லவா? இந்த வருஷம் இவ்வூரிலேயே உங்கள் தலைமையில் நடத்தவேணுமென்று பெரியவாளுக்காசை; மார்கழி பிறந்தால் நீங்கள் மதராஸ் போய்விடுவீர்களல்லவா? ஆகவே கார்த்திகை மாதத்திலேயே மகாநாடு நடக்க ஏற்பாடு செய்ய உத்தேசமாம்; உங்களுக்கு ஸௌகரியமானவொரு தேதியைத் தெரிந்துகொண்டு வரும்படியாக ஆஜ்ஞை; இப்போதே தெரிவிக்க முடியாவிட்டாலும் நாளை காலை மறுபடியும் வருகிறோம்" என்றார்கள்

'இதைப்பற்றிச் சிறிது விரிவாகப் பேசவேண்டியிருக்கிறது, உட்காருங்கள்' என்று சொல்லி எல்லோருமாக உட்கார்ந்தோம். அப்போது நாம் சொன்னதாவது—பெரியவாள் செய்துவருகிற பல நூறு நல்ல காரியங்களில் இது ஒன்று மட்டும் இல்லாமலிருக்கலாம். அவாளுக்கு இந்த ப்ரவ்ருத்தி எதற்காகவுண்டாயிற்றென்று தெரியவில்லை திருப்பாவைக்கும் திருவெம்பாவைக்கும் என்ன ஸம்பந்தம், அதையும் இதையும் ஒன்று சேர்த்துப் பிணைத்து மகாநாடு நடத்துவதில் என்ன லாபம் விளையுமென்று பெரியவாள் நினைக்கிறாளென்பது தெரியவேணும். திருவெம்பாவையைப்பற்றி ஒரு வைஷ்ணவரும் குறைவாய் நினைப்பதாக இதுகாறும்

acharya.org

எனக்குத் தெரியவரவில்லை. திருப்பாவையில் நாராயணனைத் தவிர வேறொரு தெய்வத்தைப் பற்றின பேச்சே கிடையாது. திருவெம்பாவையில் நாராயணனைத் தாழ்த்திப் பேசியிருப்பதாகப் பிரசித்தமாயுள்ளது. இதெல்லாம் எப்படியாவது இருக்கட்டும். முக்கியமாகச் சிலவிஷயங்கள் சொல்லுகிறேன். பெரியவாளிடம் சென்று ஒன்று விடாமல் விஜ்ஞாபனம் செய்யுங்கள். (என்று ஆரம்பித்தபோது பாடசாலை மானேஜரான Late ஸ்ரீஉ வே. தி வி. சிங்கராசாரியர் அங்கிருந்தவர் "இந்த மகாநாட்டில் அந்வயிக்க எனக்கு ஸௌகரியமில்லையென்று ஒரே வார்த்தையாகச் சொல்லியனுப்பிவிடலாமே; விரிவு எதற்கு"? என்று ஸம்ஸ்க்ருதபாஷையில் எனக்கு உபாம்சுவாகத் தெரிவித்தார். விவக்ஷிதங்களை ப்ராப்தேஸமயே வெளியிடாமல் அடக்கிவைத்துக்கொள்ள என்னாலாகாதே என்று சொல்லிவிட்டு பெரியவாளிடம் விஜ்ஞாபிக்க வேணுமென்றதைச் சொல்லத் தொடங்கினேன்.

ஸர்வஜ்ஞரான பெரியவாளுக்குத் திருப்பாவை திருவெம்பாவைகளின் பரிஸ்திதி தெரியாமலில்லை. ஆயினும் (ஸ்மாரயே) என்கிற கணக்கில் நினைவூட்டுகிறேன் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் (உ வே.) என்று ஒரு சிறப்புப் பெயரை ஒவ்வொருவரும் வைத்துக்கொண்டிருக்கிறோம் 'உபயவேதாந்த ப்ரவர்த்தகாசார்ய' என்பதன் ஸங்க்ஷேபம் அது; நாங்கள் ஸம்ஸ்க்ருத வேதத்தோடு நிற்காமல் த்ராவிடவேதத்தையும் ஒருகண்ணாகக் கொண்டிருக்கிறோம்; அதிலும் ஸம்ஸ்க்ருத வேதத்தை இடக் கண்ணாகவும் த்ராவிட வேதத்தை வலக் கண்ணாகவும் கொண்டிருக்கிறோம். எங்களுடைய ஆசார்ய பரம்பரையில் தலைவரானவர் நாதமுனிகளென்பவர். அவர் படாதபாடுகளும் பட்டு, என்றைக்கோ பரமபதம் சேர்ந்திருந்த நம்மாழ்வாரை ஸாக்ஷாத்கரித்து அவ்வாழ்வார் மூலமாக நாலாயிர திவ்யப்ரபந்தங்களைப் பெற்றாரென்று தென்கலையார் வடகலையார் என்கிற வாசியில்லாமல் எல்லோரும் எழுதிவைத்திருக்கிறோம். பரம்பரையாகச் சொல்லியும்வருகிறோம். அந்த நாதமுனிகள் ப்ராஹ்மணோத்தமர்; வடமொழி வேதக் கடல் கடைந்தவர். அவர் தாம் பெற்ற திவ்யப்பிரபந்தங்களைத் தம்முடைய சிஷ்ய ப்ரசிஷ்யபரம்பரயா ஸ்ரீ வைஷ்ணவ ஸந்தானத்தில் இன்றளவும் ஸூர்ய சந்திரர்களுள்ளவளவும் பரவிச் செல்லும்படி செய்து வைத்திருக்கிறார்.

அந்த நாதமுனிகளுக்கு அடுத்தபடி ஆசார்ய பீடத்தை யலங்கரித்தவரும் அவருடைய திருப்பேரனுமான (ஸ்ரீயாமுனாசார்யரென்கிற) ஆளவந்தார் தமது பிதாமஹரான நாதமுனிகளைக்காட்டிலும் பிரபல பண்டிதர். இளம் பிராயத்திலேயே சோழராஜ ஸபையிற் சென்று "மீமாம்ஸாசாஸ்த்ரயுக்மச்ரம விமலமநா ம்ருக்யதாம் மாத்ருசோந்ய:" என்று அறைகூவினவர். அன்னவரும் த்ராவிடவேதத்திலேயே போது போக்கினவர் ஸ்ரீராமாநுஜர், கூரத்தாழ்வான், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை வடக்குத்திருவீதிப் பிள்ளை பிள்ளைலோகாசாரியர். வேதாந்ததேசிகர், திருவாய்மொழிப்பிள்ளை, மணவாளமாமுனிகள்—என்று ப்ரஸித்தர்களான ஸ்ரீவைஷ்ணவாசாரியர்கள் ஒருவர்தப்பாமல் எல்லோரும் திவ்யப்ரபந்தங்களைக்கொண்டு காலக்ஷேபம் செய்வதை முக்கியமான விரதமாகக் கொண்டிருந்தவர்கள்.

இவர்கள் இன்று நேற்றைய ஆசாரியர்களல்லர்; அப்ராஹ்மணர்களல்லர்; ஸம்ஸ்க்ருத வேதவிமுகர்களல்லர். திவ்யப்ரபந்தங்களில் வேதார்த்தங்கள் விசேஷமாகப் பரிமளிக்கின்றனவென்று கொண்டே இதை நீதியாகப் பரிக்ரஹித்தார்கள். விஷ்ணுவாலயச் சிறப்புகளுக்கு திவ்யப்ரபந்தங்களையே மூலகாரணமாக வைத்து, இன்ன உத்ஸவங்களில் இன்ன திவ்யப்பிர

acharya.org

பந்தங்களை ஸேவிக்கவேண்டுமென்கிற நிபந்தனைகளையும் ஏற்படுத்தி, ஒருவருடைய புத்திக்கும் நெஞ்சுக்கும் எட்டாத, பெருமைவாய்ந்த திருவத்யயனோத்ஸவமென்று உலகப்பிரசித்தமான பகற்பத்து இராப்பத்து இய்ற்சாத்து என்கிற உத்ஸவங்களையும் ஏற்படுத்தி, இதற்கு அநத்யயன காலநியமத்தையும் கட்டளையிட்டு வைத்திருக்கிற சீரும் சிறப்புகளும் திவ்யதேசங்கள் மலிந்த தென்னுட்டில் யாருக்குத் தெரியாமலிருக்கிறது! பக்ஷபாதமற்ற கம்பர்பெருமானும் சடகோபரந்தாதியில் "அந்தமிலா மறையாயிரத்தாழ்ந்த வரும்பொருளைச், செந்தமிழாகத் திருத்திலனேல் நிலத்தேவர்களும், தந்தம் விழாவுமழகுமென்னும்? .. ... என்கிற ஒரு பாடலினுல் திவ்யப்பிரபந்தப் பெருமையைப் பேசிவைத்தார்; இச்செய்யுளின் கருத்தாவது, நம்மாழ்வார் வேதப் பொருள்களைத் திவ்யப்பிரபந்தமாக அமைத்திராமற்போனுல் தேவாலயங்களின் உத்ஸவ அழகும் வைணவ அந்தணர்களின் வீறும் தெரியுமே! என்பதாம்.

இதெல்லாம் ஒருபுறமிருக்க: ஸ்ரீ ராமாநுஜர் காலத்திலிருந்து திவ்யப் பிரபந்தங்களுக்கு வியாக்கியானங்களைப் பரமவைதிகர்களானபேராசிரியர்கள் எழுதிவைத்திருப்பதும், அதைப் பல பல நியமங்களுடன் கேட்டுணர்வதென்கிற பத்ததி எங்கும் ஒரு சிறப்பான முறையில் இற்றைக்கும் வந்துகொண்டிருப்பதும் எந்த மதத்திலுமில்லாத ஓர் ஆச்சர்யமல்லவா? திவ்யப் பிரபந்தங்களின் பொருள்களைப் பிரவசனம் செய்துவந்தார்களென்பதேயன்ருே ஸ்ரீ வைஷ்ணவத் தலைவர்களுக்கு ஏற்றமாகச் சொல்லப்பட்டு வருகிறது. பொதுவாகத் திவ்யப் பிரபந்தங்களின் பெருமை ஒருபுறம் நிற்க பிரகிருதம் திருப்பாவையைப் பற்றித் தனிப்படச் சொல்லுகிறேன் கேளுங்கள். நாலாயிரப் பிரபந்தங்களும் ஒரு தட்டாய், திருப்பாவை மட்டும் ஒரு தட்டாய் எங்கள் முன்னேர்களால் குலாவப்பட்டுள்ளது. திருவாய்மொழி முதலிய மற்றைப் பிரபந்தங்களுக்கெல்லாம் ஒவ்வொரு ஸமய விசேஷத்தில்தான் ஏற்றம். திருப்பாவைக்கு அப்படியல்ல மார்கழி மாதத்தில விசேஷ ஏற்றம் எப்படியிருக்கட்டும் தினப்படியாகவே வைணவர்களின் கிருஹங்களிலும் மடங்களிலும் ஆலயங்களிலும் திருப்பாவை ஸேவியாமல் பூஜைநடைபெருது. எந்தத் திருவிழா நடந்தாலும் 'திருப்பாவை சாத்துமுறை' என்பதே ஒரு முக்கியமான கட்டம்.

திருப்பாவையின் பெருமையைப் பற்றிப் பல நூற்றுண்டுகட்கு முன்பு தோன்றிய ஒரு வெண்பா—"பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும், வேதமனைத்துக்கும் வித்தாகும்—கோதை தமிழ். ஐயைந்துமைந்துமறியாத மானிடரை வையஞ்சுமப்பதும் வம்பு" என்பதாம் திருப்பாவை தெரியாதவரிடமிருந்து தண்ணீர் வாங்கிக் குடிப்பதும் செய்யார் வைணவப் பெரியார் உலகுக்கே உயிராக விளங்கின ஸ்ரீ ராமாநுஜர் "திருப்பாவை ஜீயர்" என்றே போற்றப் பட்டுவந்தார். திருப்பாவைக்கு அவதரித்துள்ள வியாக்கியானங்களும் அநேகம். இவ்வாருகத் திருப்பாவையின் பெருமை சொல்லச் சொல்ல வளரும்.

இனி திருவெம்பாவையெடுத்துக்கொள்வோம் இதை அந்நாள் தொடங்கி இந்நாள் வரையில் ஒரு பிராமணரும் பரிக்ரஹித்தது கிடையாது சைவர்களான பிராமணர்களோ அத்வைதிகளான பிராமணர்களோ யாரும் இதை நெஞ்சாலும் எண்ணினதில்லை. எண்ணப் போகிறதுமில்லை சிவன் கோவிலொன்றிலும் இதற்குப் பிரசாரமும் கிடையாது. ஓதுவார் என்று சிலர் இருப்பதாகவும் அவர்கள் கையில் புத்தகங்கொண்டு சில கோவில்களில் படித்து விட்டுப் போகதாகவும் திருவிழாக்கள் நடந்தால் தேவாரப் பாட்டுக்களைச் சொல்லிப் பின்னுல் பஜனை செய்து போவதாகவும் சமீபகால நிகழ்ச்சிகளைக் கேட்டு வருகிறோம் அந்தப்

acharya.org

பாடல்களுக்கும் பிராமணர்களுக்கும் ஒருவிதமான சம்பந்தமுமில்லையென்பதை மறுக்கக் கூடியவர்கள் எவருமில்லையென்பது திண்ணம். பெரியவாள் தங்களுடைய மடத்தில் நாங்கள் சிலர் வந்து திருப்பாவை யோதிறல் இதை எப்படி சகிக்கமாட்டார்களோ, அப்படியே திருவெம்பாவை யோதுவார் சிலர் வந்து அதை யோதிறலும் சகிக்க மாட்டார்களென்பதில் சந்தேகமில்லை. ஆக இரண்டு பிரபந்தங்களிலும் பெரியவாளுக்கு விருப்பமின்மையொத்திருக்க இவ்விரண்டையும் சேர்த்து மகாநாடு நடத்தவேணுமென்னும் முயற்சி மிகவும் அவசியமற்றதென்று நான் விநயத்தோடு விஜ்ஞாபனம் செய்வதாக நமஸ்கார பூர்வகமாய்ச் சொல்லுங்கள்—என்று சொல்லி முடித்தேன். அப்படியே சொல்லுகிறோமென்று சொல்லி விடைபெற்றுப் போய்விட்டார்களிருவரும்.

அவர்கள் பெரியவாளிடஞ் சென்று இவ்வளவையும் அநுவாதம் செய்திருக்க மாட்டார்களெனினும் ஸாரமாகச் சில சொல்லியேயிருப்பார்கள். பிறகு இதைப்பற்றி ஒரு ப்ரஸ்தாவமும் நேர்ந்ததில்லை. அதன் பின் அனேக ஸமயங்களில் பெரியவாளும் நாமும் ஸந்தித்திருந்துங்கூட இதுபற்றின சர்ச்சை ஏற்படவேயில்லை. திருப்பாவையில் "தீக்குறளை சென்றோதோம்" என்பதைப் பற்றிக் களேபரமுண்டாகி நாமெழுதியிருந்ததும் உலகம் பரவியதே. அதன் பின்னரும் பெரியவாளைச் சந்திக்க நேர்ந்ததுண்டு. அப்போதும் திருப்பாவையைப்பற்றின சர்ச்சை நிகழ்ந்ததில்லை. பெரியவாள் பெரும்பாலும் யாத்திரையில் இருந்துவருவதால் அதிகமாகநெருங்கிச் சந்திக்க வாய்ப்புமில்லை. ... ...

—கடிதங்கள்—

திருநாங்கூர் மங்களாசாஸன உத்ஸவம்

வண்டமருஞ்சோலை வயலாலி நன்னுடன், வாமான்தேர்ப்பரகாலனான ஸ்ரீதிருமங்கை ஆழ்வார் திருநாங்கூர்த் திருப்பதிகளை விசேஷித்து விபவத்தில் மங்களாசாசனம் செய்தபடி அர்ச்சையிலும் விடாதே மங்களாசாசனம் செய்யும் உத்ஸவம் காளயுக்தி வருஷம் தை மீ 14 15, 16 தேதிகளில், ஸ்ரீ வைஷ்ணவர்கள் பொலிக பொலிக பொலிக என்று போற்றும் வண்ணம் நடைபெற்றது

14ம் தேதி திருக்குறையலூர், திருமங்கைமடம், திருக்காவளம்பாடி, திருமணிக்கூடம் திருப்பார்த்தன்பள்ளி எம்பெருமான்களின் சந்நிதிகளில் மங்களாசாசனம் நடைபெற்றது. அன்று மதியம் காவிரிக்கரையில் ஆழ்வாருக்கு ஸ்ரீரங்கநாதன், திருநறையூர் நம்பி இவர்களின் மாலை மரியாதை நடைபெற்றது. இரவு திருமணிமாடக்கோயில், திருவண்புருடோத்தமம், திருவைகுந்த விண்ணகரம், திருச்செம்பொன்செய் கோயில், திருத்தெற்றியம்பலம், திரு அரிமேய விண்ணகரம் சந்நிதிகளில் மங்களாசாசனம் நடைபெற்று ஸ்ரீ ஆழ்வார் மீண்டும் மணிமாடக் கோயிலுக் கெழுந்தருளினார்.

15ம் தேதி திங்கட்கிழமை பதினொரு எம்பெருமான்களையும் ஒருசேர ஒரே பந்தலில் ஸ்ரீ ஆழ்வார் மங்களாசாசனம் செய்து மாலை மரியாதைகள் பெற்றுக்கொண்டது "கண்டோம் கண்டோம்" என்று ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளியபடி கண் படைத்த பயனாகவிருந்தது இரவில் பதினொரு எம்பெருமான்கள் கருடவாஹனங்களிலும், திருமங்கைமன்னன் குமுதவல்லி நாச்சியாருடன் ஹம்ஸவாஹனத்திலும் திகழ ஸ்ரீ மணவாள மாமுனிகள் ஆழ்வாரையும் எம்பெருமான்களையும் மங்களாசாசனம் செய்து கொண்டே திருவீதிகளில் எழுந்தருளினது

நேரில் சேவித்து ஆனந்தம் பெற வேண்டுவதாக அமைந்தது. திருமங்கை மன்னன் மங்களாசாசனத்தையொட்டிப் பரகாலன் பைந்தமிழ் மகாநாடு நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்டு தமிழ்நாடு ஸ்வாழ்வுத் துறை மந்திரி திரு இரா. சௌந்தரராஜன் திருமங்கையாழ்வார் பாடல்கள் தமிழ்த்தாய்க்கு அணிகலன்கள் என்றும், ஸ்ரீரங்கம் முதல்திருப்பதியாகையால் ஆழ்வார் ஸ்ரீரங்கத்தில் மண்டபப் பிராகாரங்கள் நிர்மாணித்தருளினார் என்றும் பேசினார் திருநாங்கூர் பிரதிவாதிபயங்கரம், வித்வான் ஸ்ரீ உ. வே. ஸ்ரீ நிவாஸாசாரியார், மற்றும் ஸ்ரீமான்கள் மணவாளன், ரங்கராஜன், குமாரவாடி சே. ராமாநுஜாசாரியார் ஆகியோர் திருமங்கை மன்னனின் பெருமைகளைப்பற்றிப் பரக்க உபந்யசித்தனர். அறநிலைய ஆணையர் திரு சுப்ரமணியன் அவர்களும் விழாவில் கலந்து கொண்டார்.

16ம் தேதி செவ்வாய்க்கிழமையன்று திருவெள்ளக்குளம், திருத்தேவனார் தொகை சந்நிதிகளில் மங்களாசாசனம் நடைபெற்றது திருவாலியில் ஆழ்வார் திருமுன்பே ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்மப் பெருமாளுக்கு கருட ஸேவை நடைபெற்றது திருவாலி விஷயமான முப்பது பாசுரங்களும் இந்தச் சந்நிதியில் சேவிக்கப் பெற்றன, யாத்ரீக ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இந்தச் சந்நிதியில் விசேஷமான முறையில் ப்ரஸாத விநியோகம் நடைபெற்றது. திருநகரியில் ஸ்ரீ வயலாலி மணவாளன் கருடசேவையுடன் இந்த உத்ஸவம் பூர்த்தியாயிற்று. ஸ்ரீ வைஷ்ணவர்கள் பெருந்திரளாக வந்து இந்த உத்ஸவத்தை ஆண்டுதோறும் சேவிக்கும்படிப் பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

திருவாலி க்ருஷ்ண ஸ்வாமி.

இரு பெரியார்களின் பரமபதப்ராப்தி

டாக்டர். P.B. அண்ணங்கராசாரியாரின் மறைவு

திருவிந்தளூர் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் என்பவர் பிரபல டாக்டர் மாம்பலத்தில் பிரசித்தராயிருந்தவர் நேற்று ஜனவரி மாதம் 26 ந்தேதி ஆசாரியன் திருவடியடைந்தார் வாணீமஹால் என்கிற உபந்யாஸ மண்டபத்தின் நிர்மாணத்திற்கு இவரே முக்கியஸ்தராயிருந்தவர் இவருடைய புத்திரர்கள் மேதாவிகளாய் விளங்குகின்றனர். இவருடைய ஸ்தானத்தை நிரப்புவாரில்லை இவருடைய பிராயம் எழுபது இருக்கலாம்.

(2) திருவரங்கம் பெரிய கோயிலில் ஸ்ரீரங்கநாராயண ஜீயர்ஸ்வாமி பட்டத்தை அலங்கரித்தருளியிருந்த சதுச் சாஸ்த்ர வித்வன் மணியான ஸ்ரீமதுபயவே. காரப்பங்காடு தேசிகாசார்யஸ்வாமியின் அத்விதீய புத்ர ரத்நமும், ந்யாய வேதாந்த வித்வந் மணியுமான தேசி, ரங்கராமாநுஜாசாரியர் ஸ்வாமி (5—2—79) அன்று ஸ்ரீபெரும்பூதூரில் திருநாடலங்கரித்தருளினார் என்பதை மிக்கவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம் இந்த ஸ்வாமி சிலஸம்வத்ஸரங்களாய் ஸ்ரீபெரும்பூதூரில் உபய வேதாந்த க்ரந்த ப்ரவசன நிஷ்ணாதராய் எழுந்தருளியிருந்தார். இடையில் வாயு பாதையினால் சிரமப்பட்டு தாராளமாக ஸஞ்சரிக்க முடியாமலிருந்தார் இவர் திருத்தகப்பனார் பக்கலில் ஸாமாந்ய சாஸ்த்ரத்தையும் அத்யாத்ம சாஸ்த்ரத்தையும் நன்கு அதிகரித்து விளக்கில் கொளுத்தின தீவட்டி போல் விளங்கினார். சில வருஷங்கள் திருவல்லிக்கேணிக்கு மெழுந்தருளி அங்கும் காலக்ஷேபங்கள் ஸாதித்து வந்தார், ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி வர்த்தமான, யதிராஜ ஜீயர்ஸ்வாமி. இந்த ஸ்வாமி ஸன்னிதியில் மிகவும் ப்ரவணராயிருந்து, உபய வேதாந்த ரஹஸ்யங்களையும் அதிகரித்தருளினார். இந்த ஸ்வாமியின் வியோகம் ஸ்ரீவைஷ்ணவ ஸமுதாயத்திற்கே அத்யந்த சோசநீயம்.

acharya.org

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

கீழ்த்திருப்பதி சிறிய ஜீயர்ஸ்வாமி மடத்தின் சிலாசாஸநத் திறப்பு விழா

(திருமலை அனந்தாண்பிள்ளை குன்றபாக்கம் நியாய வேதாந்த வித்வான்
சிரோமணி கிருஷ்ணமாசாரியர்)

ஸ்ரீ கீழ்த் திருப்பதியில் உள்ள சிறிய ஜீயர்ஸ்வாமி மடம் ஸ்ரீமத் பரம ஹம்ஸபரிவ்ராஜகாசார்யரான இளைய கோவில்கேள்வி அப்பன் கோவிந்த ராமாநுஜ (வர்த்தமாந சிறிய) ஜீயர்ஸ்வாமிகளால் இரண்டு லக்ஷ ரூபாய்ச் செலவில் ஜீர்ணோத்தாரணம் செய்யப் பெற்று, நடந்த நளஸூ கார்த்திகை மீ 21உ (6-12-77)ல் ஸம்ப்ரோக்ஷணமும் நடைபெற்ற விஷயம் அனைவரும் அறிந்ததே. அச்சமயம் நம் பிள்ளையின் திருவவதாரோத்ஸவம் நடந்து கொண்டிருந்தபடியினால், ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதீச்வர - பத்ம விபூஷண - மஹாவித்வான் - ஸ்ரீ உ. வே. காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள் ஷை ஸம்ப்ரோக்ஷணத்திற்கு எழுந்தருள முடியாமற் போகவே, அந்த ஸ்வாமிகளை எப்படியாவது மடத்தில் பொன்னடி சாத்தச் செய்யவேணுமென்று ஸ்ரீ சிறிய ஜீயர் ஸ்வாமிக்கிருந்த பாரிப்பே இச் சிலாசாஸநத் திறப்பு விழாவாகப் பரிணமித்ததென்னலாம்.



ஸ்ரீ ஜீயர்ஸ்வாமியின் ப்ரார்த்தனைக் கிணங்கிய ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமி, நிகழும் காளயுக்தி ஸூ தைமீ 12உ (25-1-79) வியாழக்கிழமை காஞ்சியிலிருந்து எழுந்தருள, ஸ்ரீ ஜீயர்ஸ்வாமியும் அவர்தமக்கு அந்தரங்கர்களும் பூர்ணகும்பத்துடன் அவரை வரவேற்றனர். பகல் மூன்று மணிக்கு ஷை மடத்தின் வாசலிற் பதிக்கப் பெற்றிருந்த தமிழ் - தெலுங்கு சிலாசாஸநங்களை ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமி திறந்து வைத்தருளினர். பின்பு ஸ்ரீவைஷ்ணவர்கள் குழுமியிருந்த ஷை மடத்தின் பெருமாள் ஸந்நிதிக்கூடத்தில், ஸ்ரீமான் தி. அ. கோபாலாசாரியர் மங்கள ச்லோகங்களை இசையுடன் அநுஸந்திக்கவும், அடி

acharya.org

யேன் ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமிக்கும் மற்ற ஸபையிலுள்ளோர்க்கும் நல்வரவு கூறவும் ஸபை ஆரம்பமாயிற்று.

அதன் பிறகு ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமி - க்ருபை என்பது ஸஹேதுகமா நிர்ஹேதுகமா என்ற விசாரம் இன்ருேடு தொலைந்து அது நிர்ஹேதுகந்தான் என்று தீர்ந்து விட்டது. ஸ்ரீ சிறிய ஜீயர்ஸ்வாமி அடியேனை வரவழைத்து இக்கைங்கர்யத்தில் அந்வயிக்கச் செய்த க்ருபையே இவ்வர்த்தத்தை நிலை நாட்டவல்லது என்று, தம்முடைய விநயமெல்லாம் தோன்றப் பேசத் தொடங்கி ஸ்ரீபாஷ்ய மங்கள ச்லோகத்தின் விவரண ரூபமான மதுரதமோப ந்யாஸத்தைச் செய்தருளினர். அதில் முதன் முதலாக, ச்ருதப்ரகாசிகாவ்யாக்யானத்தை யநுஸரித்து, அகிலபுவநஜந்மேத்யாதியான ஸ்ரீ பாஷ்ய மங்களச் லோகம் எம்பெருமானைப் பற்றியதென்றும், அது தன்னில், மேல் நான்கு

அத்யாயங்களிலும் விரிவாகக் கூறப்படும் ''காரணத்வம் அபாத்யத்வம் உபாயத்வம் உபேயதா'' என்னும் நான்கு முக்யார்த்தங்களும் சுருக்கமாகக் காட்டப்பட்டுள்ளன வென்றும் மிக விளக்கமாக நிரூபித்துக் காட்டி, இந்த ச்லோகம் எம்பெருமானைப் பற்றியதென்பது மேலெழுந்தாற்போல் தோன்றினலும் ஊன்றி நோக்கினல் இது நம்மாழ்வாரைப்பற்றிய தென்பது ஸித்தாந்தமாகத் தடையில்லை. மாறனடிபணிந் துய்ந்தவரான எம்பெருமானர் ''பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ரவாக்யங்கள் ஒருங்கவிடுவர்'' என்னும் ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தியின்படியே, ஸ்ரீபாஷ்யம் பண்ணியருளும்போது ஸூத்ரவாக்யங்களில் ஸந்திக்தங்களான அர்த்தங்களையெல்லாம் ஆழ்வாருடைய திருவாய் மொழியைக் கொண்டு நிர்ணயித்து ஒருங்கவிட்டருளுமவராகையால், தமக்கு உபஜீவ்யமான திருவாய்மொழியை அருளிய நம்மாழ்வாரைக் குறித்தே ஸூத்ரவ்யாக்யானமான ஸ்ரீ பாஷ்யத்தின் தொடக்கத்தில் மங்களச்லோகம் ஸாதித்திருப்பரென்று அறுதியிடுவது யுக்தமே யன்ருே? ஆக இந்த ச்லோகம் நம்மாழ்வாரைப்பற்றி எழுந்ததேயாகுமென்று ப்ரதிஜ்ஞை செய்து, அதிலுள்ள ஸப்தம்யந்தமான எல்லாப் பதங்களையும் நம்மாழ்வாரிடத்தில் அழகாகப் பொருத்திக் காட்டினர். அதன் சுருக்கம் வருமாறு:

இதில் முதல்பதம் ஆழ்வாரிடம் அந்வயிக்கும் போது, (1) அகிலம் புவநஜந்மஸ்தேமபங்காதிலீல: யஸ்ய என்றும் (2) அகிலபுவந

acharya.org

ஜந்மஸ்தேமபங்காதிநா லீலா யஸ்ய என்றும் இவ்விரண்டு வ்யுத்பத்தியை யும் பெறும். (1) ''வாஸுதேவஸ் ஸர்வம்'' என்கிறபடியே, உலகின் ஆக்கம் அளிப்பு அழிப்பு முதலியவற்றை இன்புறும் விளையாட்டாகவுடைய எம்பெரு மானையே அகிலமாக = உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்'' என்று தாம் அருளிச் செய்தபடியே தாரகபோஷக போக்யங்களெல்லாமாகக் கொண்டவர் என்ற முதற் பொருளும், (2) எல்லா வுலகின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்கு ஆதியான (காரணனை) எம் பெருமானோடு ''என்னுடைய பந்தும் கழலும் தந்து போகு நம்பீ'' என்றிப் பூடைகளிலே விளையாடுமவர் என்ற இரண்டாம் பொருளும் நம்மாழ்வாரிடம் நன்கு பொருந்தும். இனி இரண்டாம் பாதமான, நன்கு வணங்கும் பல்வகை அதிகாரிகளின் திரளைக் காப்பதில் ஒப்பற்ற விரதமுடையவர் என்னும்

பொருள்பட்டு நிற்கும் ''விநத விவித பூதவ்ராதரக்ஷைக தீக்ஷே'' என்பது, ''ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே'' என்று எல்லோரும் சரணமாக (நிரபேக்ஷோபாயமாகப்) பற்றுவது எம்பெருமானுடைய திருவடிகளேயாகையாலும் அத்திருவடிகளே நம்மாழ்வாராகையாலும், ஆழ்வாரிடம் பொருந்தக் குறையில்லை. மூன்றும் விசேஷணம் ''ச்ருதி சிரஸி விதீப்தே'' என்பது. மறைமுடியில் மிக விளங்குமவர் என்று பொருள்படும் அது. ''தத்விப்ராஸோ விபந்யவோஜாக்ருவாம்ஸ: ஸமிந்ததே'' என்கிற மறைமுடி (வேதாந்த) வாக்யத்தில் ஆழ்வார் விளங்குகின்றமை காண்மின். விப்ராஸ :-விப்ரா : என்றபடி. ''ந சூத்ரா பகவத் பக்தா : விப்ரா : பாகவதா : ஸ்ம்ருதா :'' என்ற ப்ரமாணத்தின்படி அத்யந்த பகவத் பக்தரான ஆழ்வார் விப்ரரேயென்னத் தட்டில்லை. ஆத்மாநம் லோகாந்ச விசேஷேண பாபேப்ய: பாதி (= தம்மையும் உலகோரையும் பாபங்களினின்றும் மிகவும் விடுவிக்குமவர்) என்ற வ்யுத்பத்தியுடைய இச்சொல் ஆழ்வாரிடம் அந்வயிப்பதில் ஐயமேதுமில்லை. விசேஷேண பணயந்தே என்ற வ்யுத்பத்தியைப் பெற்ற விபந்யவ : என்ற பதம் எம்பெருமானை விசேஷமாகத் துதிப்பவர் என்றும் பொருள் படும். இப்பொருள் - 'நண்ணவசுரர் நலிவெய்தவும் நல்லவமரர் பொலிவெய்தவும் எண்ணுதனகளெண்ணும் நன்முனிவர் இன்பம் தலைசிறப்பவும் (= நன்முனிவர் இன்பம் தலைசிறந்து எண்ணுதனகளெண்ணவும்) எம்பெருமானைப் பாடித்

acharya.org

துதித்த நம்மாழ்வாரிடம் பொருந்தாமை யில்லை. ஜாக்ருவாம்ஸ:=விழித்திருப்பவர் என்னும் பொருளுடைய இச்சொல் "கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே" என்று தாம் அருளிய படியே எப்போதும் தூக்கமின்றி விழித்திருக்கும் ஆழ்வாரிடம் அமைந்துள்ளது. இங்ஙனம் விப்ரராகவும் விபந்யுவாகவும் விநித்ரராகவும், ஸமிந்ததே=விளங்குகிறார் ஆழ்வார் என்று கூறும் வேதாந்த வாக்யத்தில் விளங்குகின்றமை ஆழ்வார் பக்கல் கண்டோம். ச்ருதியில் ஸமிந்ததே என்ற தன் பொருளையே எம்பெருமானார் இங்கு விதீப்தே என்று மொழி பெயர்த்தருளினர். (=ஸம் என்பதற்கு விவரணம் வி என்பது, இந்தீதாதுவின் விளக்கம் தீப்தே என்பது.) ஸ்ரீநிவாஸே என்ற விசேஷணம் ஸம்பத்துக்கு இருப்பிடமானவர் என்று பொருள்பட்டு நிற்கும், இராவணன் திரஸ்கரிக்க, நிற்க இடமுமில்லாமல் ஆகாசத்தில் நிற்கும் விபீஷணாழ்வானை 'அந்தரிக்ஷகத: ஸ்ரீமான்' என்று கூறிய வால்மீகி பகவான் இராமபிரானோடு சேர வேணுமென்ற பாரிப்பையே ஸ்ரீசப்தத்தால்குறித்தனர். நாட்டையும் மனைவியையும் விட்டு மண்வெட்டியும் கூடையும் கொண்டு இராமபிரான் பின் சென்ற இளைய பெருமாளைப் பற்றி "லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந;" என்று சொல்லிய அம்முனிவரர், இராமபிரானோடு சென்று அவர்தமக்குக் கைங்கர்யம் செய்யவேணுமென்ற பாரிப்பையேயன்றோ லக்ஷ்மீ சப்தத்தினால் குறித்திருக்கிறார். அங்ஙனமே முதலைவாயில் அகப்பட்டுத் துடிக்கும் கஜேந்த்ராழ்வான், விஷ்ணு தர்மத்தில் "ஸது நாகவர: ஸ்ரீமான்" என்று ஸ்ரீமானாகக் குறிக்கப் பெற்றமைக்குக் காரணம்—பறித்த பூவைத் திருவடியில் பணிமாறவேணுமென்ற கைங்கரியப் பாரிப்பேயன்றோ? அங்ஙனமே ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்ய வேண்டும் என்று பாரித்த நம்மாழ்வாரிடம் ஸ்ரீநிவாஸத்வம் சாலப் பொருந்தும். ப்ராப்யர் என்ற பொருளுடைய பரஸ்மிந் என்னும் விசேஷணமும் ப்ராப்யத்திற்கு எல்லை நிலமான ஆழ்வாரிடம் அழகாக அமைந்ததேயாகும். இதுவரையில் ஐந்து விசேஷணங்களின் பொருத்தம் அநுபவிக்கப்பட்டது. இனி ப்ரஹ்மணி என்னும் விசேஷ்யபதம் ஆழ்வாரைக் குறிக்குமழகு கேண்மின். ப்ரஹ்ம என்பதற்கு மிகப் பெரிய பொருள் என்று அர்த்தம். உண்மையில் "மஹதோ மஹீயாந்" என்னப்பட்ட பரம்பொருள் ஒன்றே மிகப் பெரிய பொருளாகும். இங்ஙனம் இருக்க,

acharya.org

" புவியுமிருவிசும்பும் நின்னகத்த, நீ என்
செவியின் வழிபுகுந்தென்னுள்ளாய்;—அவிவின்றி
யான் பெரியன், நீ பெரியை யென்பதனை யாரறிவார்,
ஊன்பருகு நேமியாய் உள்ளு "

என்ற பெரிய திருவந்தாதிப் பாசுரத்தில் ஆழ்வார், உபய விபூதி யுக்தனாய் மிகப் பெரியவனான எம்பெருமானையும் தம் காது வழியாக உள்ளே புகுத்தி அங்கேயே அவனை யிருத்திக் கொண்டிருக்கும் தம்மையே அவனைக் காட்டிலும் மிகப் பெரியவராகக் கூறி அசைக்க முடியாமல் ஸ்தாபித்தருளினராகையால் ப்ரஹ்மணி என்ற விசேஷ்யம் ஆழ்வாரைக் குறித்தல் மிகவும் ஸ்வரஸமாகும். இப்படிப்பட்ட நம்மாழ்வாரிடத்தில் "பவது மம சேமுஷீ பக்திரூபா" என்று-பக்தி ரூபமான ஜ்ஞாநமானது தமக்கு உண்டாக வேணுமென்று ப்ரார்த்திக்கிறார் எம்பெருமானார். எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபையினாலே; "மதிநல மருளினன்" என்கிற படியே அப்பெருமானிடம் நலமான மதியை பக்திரூபமான ஜ்ஞானத்தை ஆழ்வார் பெற்றது போல, ஆழ்வாருடைய நிர்ஹேதுகக்ருபையினால் அவர் தம்மிடம் நலமான மதியை எம்பெருமானார் பெற ஆசைப்படுகிறார். (இது காஞ்சீ ஸ்வாமியின் உபந்யாஸச் சுருக்கம்.)

இவ்வாறு உபந்யஸித்தருளிய ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமி மறுபடியும் ஸ்ரீஜீயர் ஸ்வாமி திறத்தில் நன்றிபறிதலைத் தெரிவித்துத் தம் சொற்பொழிவை முடித்தருளினர்.

பின்பு அடியேன், "யந்மநீஷிபதாம்போஜரஜ: கணபவித்ரிதம், ததேவ பவநம், நோசேத் பகாரஸ் தத்ர லுப்யதே" (=ஞானநுஷ்டானங்கள் நிறைந்த பெரியோர்களின் திருவடித் தாமரைகளின் சிறுதுகள்பட்ட இடமே பவனமாகும், இல்லையேல் பவனமென்னும் சொல்லை விட்டுப் பகரம் நீங்க, அவ்விடம் வனமேயாகும்) என்ற ச்லோகரத்நத்தின்படி; ஸ்ரீ சிறிய ஜீயர்ஸ்வாமி இது வரையில் வனமென்று தாம் நினைத்திருந்த தமது மடத்தை. ஸ்ரீஸ்வாமியை எழுந்தருளச் செய்து பவனமாக்கி மிகவும் மகிழ்ந்திருக்கக்

acharya.org

கண்டு, ஸ்ரீஜீயர்ஸ்வாமிக்கு ப்ரதிநிதியாக, அஷ்டதிக்கஜாசார்யர்களில் ஒருவரான ஸ்ரீ ஜீயர்ஸ்வாமியினுடைய மடத்தின் சிலாசாஸநத் திறப்பு விழாவினைச் சிறப்புற நடத்த, அஷ்டதிக்கஜாசார்யர்களில் ஒருவரான ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் வழித்தோன்றலான ஸ்ரீஸ்வாமியே தகுந்தவரென்று கூறி, ஸ்ரீகாஞ்சீஸ்வாமி தம்முடைய திருமேனித் தளர்ச்சியையும் பொருட்படுத்தாமல் எழுந்தருளி விழாவினைச் சிறப்பித்ததற்கு க்ருதஜ்ஞதையை விண்ணப்பித்து, ஸபையை அலங்கரித்த மற்ற பெரியோர் திறத்திலும் நன்றி தெரிவித்து ஸத்தை பெற்றேன்.

ஸ்ரீஜீயர் ஸ்வாமி தமது ஔதார்யத்திற்குத் தக்கவாறு ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமியை—நல்ல சால்வையொன்றினைப் போர்த்தி விசேஷ ஸம்பாவனை செய்து கௌரவித்தருள, கோஷ்டிக்குத் தாம்பூல பலவிநியோகமாகி ஸபை இனிதே முடிவுற்றது.

மாலை 6 மணியளவில் ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாள் ஸர்வாபரண பூஷிதராய் சேஷவாகனத்தில் புறப்பட்டெழுந்தருள, ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமி அப்பெருமாளை மங்களாசாஸனம் செய்தருளி, ஸ்ரீஜீயர்ஸ்வாமியிடம் விடைபெற்று ஸ்ரீகாஞ்சிக்குத் திரும்பியருளினார்.

திருப்பதி
3-2-79

இங்ஙனம்
தி. அ. க்ருஷ்ணதாஸன்

இஞ்சிமேட்டு ஸ்ரீமதழகிய சிங்கரின் சதாப்திபூர்த்தி மஹோத்ஸவ நிகழ்ச்சி

அனக்காவூர் A. T. துரைஸ்வாமிதாஸன்

ஸ்ரீமதஹோபில மடத்தில் 42- பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் நூறுவது திருநக்ஷத்ர பூர்த்தி மஹோத்ஸவம் 19—1—79 மதுராந்தகத்தில் உபக்ரமித்து பத்துநாட்கள் விசேஷமாக நடைபெற்றது. ஸ்ரீமதழகியசிங்கரின் நூறுவது திருநக்ஷத்ர ஜ்ஞாபகார்த்தமாக மதுராந்தக ஸம்ஸ்க்ருத கலாசாலையை விச்வ வித்யாலயமாக விரிவுபடுத்த இதாநீ ஸ்ரீமதழகியசிங்கர் திருவுள்ளம் பற்றியாயிற்று. அதற்காக பம்பாயில் வாழ்ந்துவரும் பெருவள்ளல் ஸ்ரீ ஆர் ராமாநுஜ ஐயங்கார் ஸ்வாமி அவருடைய தகப்பனார் ஸ்ரீரங்கஸ்வாமிஐயங்கார் ட்ரஸ்டிலிருந்து பத்து லக்ஷ ரூபாய் செலவு செய்து பெரிய கட்டிடத்தை நிர்மாணித்துக் கொடுத்திருக்கிறார். அக்கட்டிடத்தை இதாநீ ஸ்ரீமதழகிய சிங்கர் ஹஸ்த நக்ஷத்ரத்தில் திறந்து வைத்து மாலோல வித்வத் ஸதஸ்ஸை

acharya.org

உபக்ரமித்தாயிற்று. அப்பொழுது இஞ்சிமேட்டு ஸ்ரீமதழகியசிங்கர் பாடசாலையையும், ஸதஸ்ஸையும் உபக்ரமித்ததின் நோக்கத்தைச் சொல்லி சுபேந மநஸாத்யாதம் என்கிறபடி நல்ல திருவுள்ளத்ததால் ஆரம்பித்தால் இவைகள் மேன்மேலும் வ்ருத்தியடைந்து வருவதை நாம் பார்க்கிறோம். ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவுள்ளத்திற்கு உகப்பான ஸ்ரீபாஷ்ய விசாரத்தை செய்வோம் அதுதான் அம்மஹானுக்கு நாம் செய்யும் கைங்கர்யமாகும் என்றருளிச் செய்து ஸதஸ்ஸை உபக்ரமித்து வைத்தாயிற்று. காலை மாலை இரண்டு வேளைகளிலும் ஸ்ரீபாஷ்யத்தில் வாக்யார்த்தம் நடைபெற்றன. வழக்கப்படி ஸ்ரீமதழகியசிங்கர் அநிதரஸாதாரண ரீதியில் கேள்விகளைக் கேட்டு வித்வான்களை ஸந்தோஷிக்கச் செய்தாயிற்று. தென்னிந்தியாவில் உள்ள ப்ரபல வித்வான்கள் எல்லோரும் ஸதஸ்ஸிற்கு வந்திருந்தார்கள். வித்வான்களுக்கும் வேத ப்ரபந்த அத்யாபகர்களுக்கும் நூறு ரூபாய் ஸம்பாவனையும் மார்க்கச் செலவையும் கொடுத்தாயிற்று. திருநக்ஷத்திரத்தன்று ஐயாயிரம் பேர்களுக்கு மேல் வந்திருந்தார்கள். சாற்றுமுறை நன்கு நடைபெற்றது. ஸதஸ்ஸிற்கு வேண்டிய த்ரவ்யம் பூராவையு பம்பாய் வள்ளல் ஸமர்ப்பித்தார்.

தேவப்பெருமாள் திருவருள்

இப்பெயர் பூண்ட வொரு நூல் சமீபகாலத்தில் வெளிவந்துள்ளது; அந்நூலின் பிரமேயம் இன்னதென்று தெரிவதற்காக அதிலுள்ள முன்னுரையை இதன் கீழே வெளியிடுகிறோம்.

முகவுரை வருமாறு

'தேவப்பெருமாள் திருவருள்' என்னுமிந்நூல் இப்போதாகப் புதிதாய் எழுதப்பட்டதன்று. பல வாண்டுகட்கு முன்பு ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம் ஸ்வாமியால் எழுதி வெளியிடப்பட்ட பல கட்டுரைகளின் தொகுப்பாக இப்போது மறுபதிப்பு செய்யப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமியின் பல நூற்றுக் கணக்கான நூல்களில் சில வருஷகாலமாய் கிடைப்பதற்கு அருமையாகியுள்ள நூல்களையெல்லாம் மறுபதிப்புச் செய்ய, சென்னை, மதுரை' திருச்சி, திருநெல்வேலி முதலானவிடங்களில் பல வைதிக லௌகிகத் தலைவர்கள் கூடிச் சபைகள் ஏற்படுத்தியிருப்பதால் அவற்றில் ஒரு சபையார் செய்த திருப்பணி இது.

காஞ்சீபுரம் தாதாசாரியர்களில் ஒருவரான ஸ்ரீமான். R. வரத தாதாசாரியர் என்பவர் நேற்று கார்த்திகைமாதத்தில் ஸ்ரீ தாததேசிகன் திருநக்ஷத்திரத்தன்று ஆங்கிலத்தில் தாததேசிகன் பெருமைகளைப் பற்றி ஒரு புத்தகம் வெளியிட்டதாகவும், அதில் தகுதியற்ற பல விஷயங்கள் பொறிக்கப் பட்டிருப்பதாகவும், அப்புத்தகத்திற்கு 40ரூ விலை வைத்திருப்பதாகவும் கேள்விப் படுகிறோம். 400, அல்லது 4000ரூ விலைவைத்தால் அதை ஒருவரும் கண்ணெடுத்துப் பாராமலேயிருக்கலாம் அதற்கு மறுப்பு வெளிவராமலிருப்பதற்கு இது நல்லவுபாயமல்லவா?

acharya.org

40ரூ விலையுள்ள அச்சுவடியில் எழுதப்பட்டுள்ள அபத்த பஞ்சாங்க புஞ்ஜங்களுக்கு, தேவப்பெருமாள் திருவருளென்னுமிந்த நூலே போதுமான தென்று திண்ணமாகச் சொல்லலாம்.

ஸ்ரீமத் பிரதிவாதிபயங்கர வம்சஸ்தர்களின் மூலபுருஷரான அண்ணன் வடகலைவகுப்பைச்சேர்ந்தவரென்பது ஷை தாதாசாரியர் சுவடியில் ஒரு அஸம்பத்தப் பேச்சு. ஸமீப காலத்தில் பிரதிவாதி பயங்கரம் ஸ்வாமியின் ஆப்தர்மூல மாக வெளிவந்திருக்கிற உத்தம வித்வன் மனோரஞ்ஜனத்தில் உத்தமூரர்க்கு இட்ட வ்யாமோஹ ப்ரசமௌஷதம் என்று வெளிவந் திருக்கும் பகுதியை வாசித்துப்பார்த்தால் நம் வரத தாதாசாரியார் பல்பல வுண்மைகளை எளிதில் உணர்ந்து கொள்ளுவர்; அதனோடு கூட நேற்று மார்கழியில்வெளிவந்துள்ள சதப்ரச்ந ரத்னவளியை ஆதியோடந்தமாக வாசித்துப் பார்த்தாலும் பலவுண்மைகள் விளங்கும்.

நமது நண்பர் வரததாதாசாரியர், ஸ்ரீ தாததேசிகனையும் ஸ்ரீ வேதாந்த தேசிகனையும் வடகலையென்று மருண்டிருக்கிறார்போலும். 1909ல் எழுதி வெளிவந்துள்ள தாததேசிகனீடுபாடு சின்ன காஞ்சியில் ஒவ்வொருவர் திருமாளிகையிலுமுள்ளது. அதை மறுபடியும் வாசித்தாராகில் முந்தின மருள் தொலையும். (2) தேசிக ரஹஸ்யமொன்றில் முடிவில் "விசுத்ததேசிகவதா ரங்கதாம்நி வ்யலிக்க்யத" என்றும், பகவத்தியாநஸோபாநத்தின் முடிவில் "ரங்காஸ்தாநே ரஸிக மஹிதே ரஞ்ஜிதா சேஷசித்தே வித்வத் ஸேவாவிமலமநஸா வேங்கடேசேந" என்றும், முநிவாஹந போகத்தின் முடிவில் "நாண் பெரியோமல் லோம் நாம் நன்றுந்தீதும் நமக் ஸ்ரீ ரங்கத்தில் நாச்சியார் ஸன்னிதிக்கெதிரே தேசிகன் ஸன்னிதிவாசற் கொடுங்கையில் திகழும் காரைக் கட்டிடமான தென்கலைத் திருமண்காப்பு குறைப்பாருளரென்று நாடுவோமே" என்றும் அருளிச் செய்த நம் ஸ்வாமி தேசிகன் தாமே தமது நிலைமையைத்தெளிய வெளியிட்டருளினராயிற்று. பிரபலமான ஸாக்ஷியல்லவா ?

காஞ்சியில் ஸ்ரீ ஜகத்குரு காதி ஸ்வாமி யெழுந்தருளியிருந்த போது (பழையதர்மஹர்த்தாக்களான) அய்யா. ரகுநாத தாதாசாரியாரும், மேல் பாக்கம் குமார தாதாசாரியாரும் தனித் தனியே சில ஸமயங்களில் வந்து வார்த்தையாடுவர்கள். ஒருநாள் இருவரும் சேர்ந்து வர நேர்ந்து விட்டது. அன்று ஸ்ரீ பெரும்பூதூர் ஸ்வாமியொருவர் ஸ்ரீ காதிஸ்வாமி ஸன்னிதிக்கு வந்திருந்தார். ஏதோ வார்த்தை யடைவில், ரகுநாத தாதாசாரியார் ஸ்ரீபெரும் பூதூரில் பழங்காலத்தில் தாம் அநுபவ்த்த ஒப்புயர்வற்ற ஸன்னிதி மரியாதைகளை விரிவாகச் சொல்லிக் கண்ணீர் பெருக்கினர். அப்போது உடனிருந்த குமாரதாதாசாரியார் "கீழ்க் காலங்களில் மனம்போனபடி யெல்லாம் சிலவிஷமங்களைச் செய்து ,விட்டு, மொட்டைச்சி கூந்தலை நினைத்துக்கொண்டு அழுவது போலே இப்போது அழு, விக்கி விக்கி யழு" என்று சொல்லிக் கொண்டே எழுந்துசென்றார். இது அறுபது வருடங் களுக்கு முந்தின செய்தி. இன்று போலுள்ள தந்தோ '..... ★

acharya.org

ஸ்ரீமத் பரமஹம்ஸ இஞ்சிமேட்டழகியசிங்கர்

பத்ராதிபரால் எழுதப்பட்டு சதாப்தி மலரில் வெளிவந்த கட்டுரை.

நெடு நாள் அஹோபில மடாஸ்தானத்தை அலங்கரித்திருந்து இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு திருநாடலங்கரித்த ஸ்ரீமத் இஞ்சிமேடு ஸ்வாமி பூர்வாச்ரமத்தில் இஞ்சிமேடு ரங்கநாதாசார்ய ஸ்வாமி என்று வ்யபதிஷ்டர். திருப்பதியில் ஸ்ரீமத் புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமிஸந்நிதியில்நெடுநாள்வாழ்ந்து சாமான்ய சாஸ்திரங்களை அதிகரித்து உபயவேதாந்த ப்ரவர்த்தந ப்ரவீணராய்க் காஞ்சியில் பல ஆண்டுகள் எழுந்தருளியிருந்தார். அடியேனுடைய கிருகத்திற்கு அதிஸமீபத்திலேயே ஒரு திருமாளிகையை ஸ்வகீயமாகக் கொண்டு குடி வாழ்ந்து வந்தார். அப்போது இருவோமுக்கும் மிக நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. அநுஷ்டானத்திற்கு வெள்ளக்குளம் எழுந்தருள்வர். அடியேனுடைய கிருகத்தின் பக்கத்திலுள்ள ஸந்துவீதி வழியாகவே அந்தக் குளத்திற்குச் செல்ல வேண்டுமாதலால் இருவரும் ஒன்று சேர்ந்தே குளம் செல்வது தினப்படியான வழக்கம். திரும்புகிற ஸமயத்தில் சேர்த்தி ஏற்படுவது அரிதாகும். செல்லுகிற ஸமயத்தில் நியமேந சேர்ந்துதான் செல்வது. அப்போதைய ஸம்பாஷணைகள் ஐம்பது வருஷங்களுக்கு மேலானாலும் மறக்க முடியாதவை.

திருப்பதியில் தாம் வாழ்ந்தபோது ஸ்ரீமத் புரிசை ஸ்வாமி பக்கலிலே தாம் அநுபவித்த விசேஷங்களை ஒவ்வொரு நாள் ஒவ்வொன்றாக ஸாதித்தருள்வர். மற்றும் அநேக க்ராந்திக விஷயங்களையும் ஸாதித்தருள்வர். இடையிடையே ஸம்ப்ரதாயார்த்த சர்ச்சைகளும் நடைபெறும். கோபதாபங்கள் சிறிதுமில்லாமல் புன்முறுவலோடே ஸாதிப்பர்; தூமுறுவல் கொண்ட முகத்துடனே கேட்டருள்வர். மனச்சாக்ஷியை மீறியோ அப்ராமாணிக வழியை அவலம்பித்தோ விதண்டா வாதமாகவோ ஓரக்ஷரமும் ஸாதிக்க மாட்டார். அந்த ஸ்வாமியிடத்தில் அடியேன் விசேஷித்து அநுபவித்த குணம் இது. பெருங்கட்டூர் கண்டாவதாராசார்ய ஸ்வாமி என்றொருவர் ஸந்நிதி வீதியில் எழுந்தருளியிருந்தார், அவர் கேவல வையாகரணர். கோவில் பாடசாலையில் பல வருஷங்கள் வ்யாகரண ப்ரவசநம் செய்துகொண்டிருந்தவர். அந்த ஸ்வாமியின் இயல்வு இஞ்சிமேடு ஸ்வாமியின் இயல்வுக்கு நேர்மாறானது. விஷய சர்ச்சை என்றெடுத்தால், அது எந்த விஷயமானாலும் சரி, கோபதாபங்களில் தான் பர்யவஸித்து நிற்கும் அவர்க்கு உச்சைருத்கோஷம் பிரபலமாக இருக்கும். இஞ்சிமேடு ஸ்வாமியின் கம்பீர ப்ரக்ருதிகளை நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சு கனிந்திருக்கும்.

அஸ்மதாசார்யரான ஸ்ரீ ஜகத்குரு ப்ரதிவாதி பயங்கரம் காதி அனந்தாசார்ய ஸ்வாமி தமது திருமாளிகையில் ஒரு ஸம்வத்ஸரப் [ப்ரஜோத்பத்தி வருஷம் என்று ஞாபகம்] ஐந்து நாள் வித்வத்ஸதஸ்ஸு நடத்தினார். அதில் இருபத்தைந்து வித்வான்கள் கூடினர். முக்கியமாக வேதாந்தார்த்தவிசாரம் செய்வதற்காகவே இந்த ஸம்மேளனம் கூட்டப்பட்டது ஸ்வாமியால். மைஸூர் ப்ராந்தத்தவரான ஸ்ரீமதுபயவே. நெக்குஹள்ளி திருமலாசாரியர் ஸ்வாமி என்கிற ஒரு மஹாவித்வான் பெரும்பாலும் தம் மோடொத்த வித்வானான ஓர் அந்தேவாஸியுடன் யாத்ருச்சிகமாக அந்த ஸதஸ்ஸுக்கு ஐந்து நாளும் எழுந்தருளியிருந்தார். (அந்த ஸ்வாமி ஸோமாசியாண்டான் திருவம்சஸ்தர் என்று ஞாபகம்.) ஸ்ரீகாதி ஸ்வாமியின் வேண்டுகோளினால் ஸ்ரீமத் இஞ்சிமேட்டு ஸ்வாமி [க்ருஹஸ்தாச்ரமஸ்தர்] ஐந்து நாளும் ஸபாபதியாக எழுந்தருளியிருந்தார். கீழே ப்ரஸ்தாவித்த நெக்குஹள்ளி ஸ்வாமி ஒரு நாள் தம்முடைய ப்ரவசநத்தில் பூர்வமீமாம்ஸா விஷயமொன்று ப்ரஸ்தாவித்தார். இஞ்சிமேட்டு ஸ்வாமி அதில் அநுபபத்தியை ஆவிஷ்கரித்தார் உடனே அந்த ஸ்வாமி "இந்த விஷயம் உமக்குத்

acharya.org

தெரியாது. கேட்டுக்கொண்டிரும்'' என்று உத்படமாகக் கூறினர். இஞ்சிமேட்டு ஸ்வாமி உடனே எழுந்து வெளியே சென்றுர். ஏதோ திருவுள்ளத்தில் சீற்றத்தினால் எழுந்தருளி விட்டதாகவே எல்லோரும் நினைத்து வருந்தினர்.

ஸ்ரீகாதிஸ்வாமியும் அப்படியே நினைத்து, ''அண்ணு! நீபோய்அவரை எழுந்தருளப்பண்ணி கொண்டுவா'' என்று அடியேனுக்கு நியமித்தருள அடியேன் புறப்பட்டுச் செல்லுகையில், ஸ்வாமி ஒரு ஸ்ரீகோசத்துடன் எதிரே எழுந்தருளுகிறுர் அந்த ஸ்ரீகோசம் 'டுப்டீகா' என்கிற மீமாம்ஸா க்ரந்தம் என்று ஞாபகம். ஏறக்குறைய ஐம்பது வருஷமாய்விட்டது க்ரந்தத்தின் பெயர் வேருகவும் இருக்கலாம். அதில் ஒரு பக்கத்தை எடுத்து அந்த நெக்குஹள்ளி வித்வான்கையில் கொடுத்து, ''இதை வாசியும்'' என்றுர். அவருடைய அந்தேவாஸி உரக்க வாசித்தார். உடனே அந்த வித்வான் வேறு ஒரு வார்த்தையும் சொல்லவில்லை; ''ஜிதோஸ்மி, ஜிதோஸ்மி'' என்று இரு முறை சொல்லி நின்றுர். அப்போது ஸதஸ்யர்களான வித்வான்களெல்லாரும் விஸ்மயஸ்திமிதராயினர். அந்த விஷயம் வித்வான்கள் அனைவர்க்கும் நன்கு புரியும்படி இஞ்சிமேட்டு ஸ்வாமியே விரிவாக உபந்யஸித்தார். அந்த ஸந்நிவேசம் எத்தனை வருஷமானாலும் மறக்க முடியாமலிருக்கின்றது. இது அடியேனுக்கு நித்ய ஸ்மரணத்திலுள்ள விஷயம்.

ஸ்ரீஸ்வாமிக்கு இந்த வைதுஷ்யப் பெருமை ஒரு புறம் இருக்க, ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணவிசேஷங்கள் வாசாமகோசரம் அடியேனுடைய வீதியிலேயே ஸமீபத்தில் எழுந்தருளியிருந்தபடியாலே ஸ்வாமியை ஸேவிக்கப்பெருத நாள்ஒன்று கூடத் தேருது.

ஸ்ரீஸ்வாமியின் ஜாமாதா நல்ல வேதாந்தயநசீலராகையாலே தினப்படியாக அவரோடு க்ரமசர்ச்சை சொல்லுவதற்கு இரவில் திருமாளிகைக்கு விடைகொள்வேன். அப்போது ஒவ்வொரு நாளும் மேலே என்ன எழுதுவது என்று தோன்றவில்லை. திருவரங்கம் பெரிய கோயிலிலும் திருவெவ்வுளூரிலும் அடிக்கடி விடைகொண்டு ஸேவிப்பேன். ''அலமேலு ஸௌக்கியமா? கனகம் ஸௌக்கியமா?'' என்பதே முதல் குசலப்ரச்நம். 'அலமேலு' எனது திருத்தாயார் பெயர். 'கனகம்' தமக்கையின் பெயர். அவ்விருவர் பக்கலிலும் (ஆச்ரமஸ்வீகாரடான பிறகுங்கூட) ஸ்ரீஸ்வாமியின் அநுக்ரஹம் நிரவக்ரஹமாக இருந்தது.

ஸ்ரீஸ்வாமியின் ப்ரபாவாதிசயம் பன்னியுரைக்குங்கால் பாரதமாமென்று நிறுகிறேன்.

ஆழ்வார் திருநகரியில்

ஷஷ்டியப்த பூர்த்தி யுத்ஸவம்

ஸ்ரீ உ. வே. R. P. இராமய்யங்கார் ஸ்வாமியின் ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவம் 26-11-78 ஞாயிற்றுக்கிழமை யன்று வெகு சிறப்பாக நல்லார் நவில் திருக்குருகூரில் நடைபெற்றது. அவ்வைபவத்தை முன்னிட்டு ஐந்து தினங்கள் திவ்ய ப்ரபந்தவேத பாராயண கோஷ்டிகளும் உபந்யாஸங்களும் நடைபெற்றன. ஸ்ரீரங்கம்ஸ்ரீ உ. வே. தி. அ. சதாபிஷேகம் கோவிந்த நரசிம்ஹாசாரியர் ஸ்வாமிகள் ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' உபந்யாஸமும் ஸ்ரீ உ. வே. இளையவில்லி பூவராஹாசாரியர் ஸ்வாமிகள் ஸ்ரீராமாயண உபந்யாஸமும் நிகழ்த்தினர். ஷஷ்ட்யப்தபூர்த்தி கண்டருளும்

acharya.org

ஸ்வாமியின் குணபூர்த்தி பற்றி ஸ்ரீ உ வே. பூவராஹாசாரியர் ஸ்வாமிகள் கீழ்வருமாறு குறிப்பிட்டார். "அடியோங்களுடைய திருத் தகப்பனுர் ஷஷ்ட்யப்தபூர்த்தி காணும் ஸ்வாமிக்கு ஆசார்யர். ஸ்வாமி அடியோங்களுக்கு மாமாவும் ஆக வேணும். அடியோங்களுக்கும் ஸ்வாமிக்கும் அதைவிட மேலான பாந்தவ்யம் ஆசார்ய - சிஷ்ய பாவம்.

"தன்னுரியனுக்குத்தான் அடிமை செய்வது அவன் இந்நாடு தன்னில் இருக்கும் நாள் - அந்நேர் அறிந்தும் அதிலாசையின்றி ஆசார்யனைப் பிரிந்

திருப்பாரார் மனமே பேசு" என்ற ஸ்ரீ மணவாள மாமுனிகளின் நிலையே நம் ஸ்வாமியின் நிலையும். ஸ்வாமியின் இக்குணபூர்த்தியினுலேயே அடியோங்களுக்கு திருத்தகப்பனுர் இல்லாத குறை தோற்றவில்லை". ஆக இங்ஙனம் ஸ்வாமியின் ஆசார்ய ப்ரதிபத்தியைச் சிறப்பித்துப் பேசி "ஸ்ரீராம பட்டாபிஷேகத்துடன்" மஹோத்ஸவத்தை இனிதே தலைக்கட்டி வைத்தார். பல திவ்ய தேசத்திலிருந்து வந்திருந்த எம்பெருமான்களின் ப்ரஸாதங்கள் ஸ்வாமிக்கு வழங்கப்பெற்றன.

இப்படிக்கு,
ஸ்ரீசடகோபதாஸன் பொன்னப்பன.

acharya.org

நைச்யாநுஸந்தானம்

நமக்கு நைச்யாநுஸந்தாநம் ஸ்வரூபம் என்றறிந்து நாம் ''நீசனேன் நிறையொன்றுமிலேன்'' என்றும் ''சீலமில்லாச் சிறியன்'' என்றும் பல வாறு பாசுரங்களை முன்னிட்டுத் தாழ்வு சொல்லிக் கொள்ளுகிறோம். நம் வாயினால் வெளிவந்த அந்தத் தாழ்வு தன்னையே பிறரொருவர் நம்மை நோக்கி எடுத்துரைக்கத் தொடங்கினால்' என்னையா நீசனென்றாய்? என்னையா நிறையொன்று மில்லாதவனென்றாய்? என்னையா சீலமில்லாச் சிறியனென்றாய்? பாவீ! நீயன்றோ இப்படிப்பட்டவன்' என்று உடனே அவரை ஆயிரம் வகையாக தூஷிக்கவும் தண்டிக்கவும் தண்டிப்பிக்கவும் எழுகின்றோம். ஒவ்வொருவரும் தம் தம் அனுபவத்தில் இதை நிச்சயமாகக் காணலாம்.

சில விசேஷ காலங்களில் பெரியார்களை எழுந்தருளப்பண்ணி ஸ்வாமிந்! ஸ்ரீபாத தீர்த்தம் ஸாதிக்கவேணும் என்று வேண்டுகிறோம். அதற்கு அவர்கள் ஐயோ! அடியேனுக்கென்ன யோக்யதை யுண்டு? ஸகல விதத்திலும் அயோக்யனன்றோ அடியேன்' என்று பலபடியாக நிகர்ஷாநுஸந்தானம் பண்ணுகிறார்கள். இந்த அநுஸந்தானம் உள்ளவாறு செய்கிறபடியா? அல்லது இங்ஙனே சொல்லிக் கொள்ள வேண்டுவது ஒரு உபசார வழக்கு என்று கொண்டு செய்கிறபடியா? என்று நாம் யோசித்தால், அவர்களுடைய ஹ்ருதயத்தை நம்மால் தெரிந்து கொள்ளமுடியாதாயினும், அவர்கள் தாங்கள் அநுஸந்தித்த நீசத்தன்மையை நம் வாயினால் சொல்லிக்காட்டின விடத்தும்' (அதாவது நீர் மிகவும் அயோக்கியர் என்று பிறர் சொன்ன விடத்திலும்) அவர்கள் உகந்தேயிருப்பார்களாயின் அப்போது தான் அவர்களுடைய நைச்யாநுஸந்தானத்தை நாம் ஸஹ்ருதயமென்று நினைக்கலாகும்.

'அஹம் அமர்யாத:, அஹம் க்ஷுத்ர;' என்று நைச்யாநுஸந்தானம் பண்ணுமவர்கள் ''த்வம் அமர்யாத:, த்வம் க்ஷுத்ர;'' என்கிற பரோக்தி களை உகந்திருக்கிறார்களா? என்றே நாம் பார்க்கவேண்டும். கூரத்தாழ்வான் போல்வாரான சிலரே அங்ஙனமிருந்தார்கள் என்று சொல்ல வேண்டியதாகின்றது. தம்மைப்பற்றிப் பிறர் கூறும் நிகர்ஷோக்திகளைச் சிறிதும் ஸஹியாமல் உடனே பிரபலமாக ப்ரதி ஸத்காரம் செய்யப் புறப்படுமவர்கள் தாங்கள் செய்துக்கொள்ளும் நிகர்ஷாநுஸந்தானம் அர்த்தமற்றது என்றே சொல்லவேண்டும்.

''ஒருவன் உன்னை இடது தாடையில் அறைந்தானாகில் உடனே அவனுக்கு நீ வலது தாடையை ஆதரவோடு காட்டு'' என்று பிரஸங்க மேடைகளில் பேசுவாரை மிக மிகக் காண்கிறோம். அப்படி அவர்கள் பேசி இப்பால் வந்தவுடனே அவரை ஒருவர் அடிப்பதாகக் கையோங்கும்போதே என்ன நடக்கிறதென்பதையும் காணா நின்றோம். ★

acharya.org